விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 336 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை (20.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வை
# வடக்குக்கு பெற்றுத்தர நடவடிக்கை



## வவுனியாவில் ஜனாதிபதி ரணில்

(வவுனியா)

**அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை வடக்குக்கு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை வடக்கின் பிரச்சினைக் குத் தீர்வு காணும்போது சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அதற்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி அலுவல கத்தின் கீழ் செயற்படும், வடமாகாண அபிவிருத்தி விசேட பிரிவின் உப அலு வலகத்தை நேற்று வவுனி யாவில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

75ஆவது சுதந்திர தின விழாவின் போதாவது இந் நாட்டின் அனைத்து மக்களும் ஒரு தாயின் பிள்ளைகளாக வாழக்கூடியதாக இருக்க வேண்டுமென தான் பிரார்த் திப்பதாகவும் அவர் தெரி வித்தார்.

நீண்ட காலமாக வடக்கு மற்றும் 19

## வவுனியா வந்தடைந்தார் ஜனாதிபதி ரணில்



19

## ரணிலின் வருகையை எதிர்த்துப் போராட்டம்



03

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரி விற்குட்பட்ட நவாலி - மூத்த நயினார் ஆலயத்திற்கு அரு காமையில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து இளைஞன் ஒருவரது சடலம் நேற்று முன் தினம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப் பட்டவர் ஆனைக் 19

## நாவற்குழியில் வாள்வெட்டு; இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற் குழிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளை ஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கு அருகா மையில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த இளை ஞனை வாளால் வெட்டிக் காயப்படுத்தி 19

## காணிப் பிரச்சினைகளை தீர்க்க குழு நியமனம்
### ஜனாதிபதி நடவடிக்கை

(வவுனியா)

காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாகாண மட்டத்தில் 08 குழுக்களை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி வடக்கு மற்றும் தெற்கில் நிலவும் காணிப்பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் 19

### அரசின் அடக்குமுறை
## மன்னிப்புச் சபை அதிருப்தி வெளியீடு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஆர்ப் பாட்டக்காரர்கள் தடுத்துவைக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னேஸ் கலாமார்ட் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு 19

## வவுனியாவில் ஜனாதபதி பங்கேற்ற நிகழ்வில் கூட்டமைப்பும் பங்கேற்பு



(வவுனியா)

வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர்களும் பிர சன்னமாகியிருந்த னர். 19

## கட்டட இடிபாட்டுக்குள் சிக்கி தொழிலாளி பலி
### இயக்கச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

பளைப் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட இயக்கச்சி முகா வில் பகுதியில் கோயில் கட்டு மான பணியில் இருந்த பணி யாளர் ஒருவர் பலியாகிய சம்ப வம் ஒன்று பதிவாகியுள்ளது.

கோயில் கட்டட வேலை ஒன்றில் கொங்கிறீட் போடும் வேலை இடம்பெற்று கொண் டிருந்தபோது முட் டுக் கொடுக்கப்பட் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீண்டகால பிரச்சினையை தீர்க்க உறுதுணையாக இருப்போம்

## சுமந்திரன் தெரிவிப்பு



(வவுனியா)

நீண்டகால இன பிரச்சனையை தீர்க்க நாம் உறுதுணையாக இருப்போம் என ஜனாதிபதி முன்னிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்தி விசேட பிரிவு அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அவர்கள் வடக்கு, கிழக்குக்கான இந்த ஜனாதிபதி செயலணியை திறந்து வைப்பதற்காக வருகை தந்தமைக்காக வடக்கில் இருந்து அவரை நாம் வரவேற்கின்றோம். வடக்கு, கிழக்குக்கு விசேடமான ஒரு நிதியை அவர் பிரதமராக இருந்த போது பனை நிதியம் என உருவாக்கியிருந்தார். போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் எழுச்சிக்காக அது உருவாக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் மீள் எழுச்சிக்காக அன்றே கவனம் செலுத்தியிருந்தார். தற்போது ஜனாதிபதியாக மிகவும் முக்கியமான இந்த நடவடிக்கையை முன்னெடுக்கும் போது நாம் வாழ்த்துக் கூறுகின்றோம். இந்த விடயத்தில் சேர்ந்து இயங்குவோம் என உறுதியளிக்கிறோம்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்ட போது சமஸ்டி தீர்வை முன்வைத்து போட்டியிட்டார். அந்த நேரத்தில் வடக்கு மாகாணம் கால்த்தடம் போட்டு விழ வைத்தது. தற்போது விழ வைத்தவர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். மிக முக்கியமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தற்போது அமைச்சரவையில் இருக்கிறார். அவர்களுடைய ஆதரவையும் கொண்டு ஜனாதிபதியாக இருக்கும் நிலையில் இந்த நீண்டகால இன பிரச்சனைக்கு ஒரு ஆக்கபூர்வ முடிவை எடுப்பதாக சொல்லியிருக் கிறார். அதனை தீர்ப்பதற்கும் நாம் உறுதுணையாக இருந்து செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

(4,7,250)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 2020இல் நடைபெற்ற **தரம் 5** புலமைப்பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து 98% சித்தி பெற்று வடமராட்சி வலயத்தில் ஒரேயொரு பாடசாலை அதிபராக தெரிவு செய்யப்பட்ட எமது அதிபர்

**திரு.மகாதேவன் மகாகேதீஸ்வரன்**

அவர்களையும்

வடமராட்சி வலயத்தில் கௌரவிக்கப்படவுள்ள-4 ஆரம்பக் கல்வி ஆசிரியர்களில் எமது பாடசாலை ஆசிரியர்களான



**திருமதி சாந்தினி கலாதீபன் (100%)**



**திருமதி பாமினி தனபாலசிங்கம் (96%)**

அவர்களையும்

**வெட்டுப்புள்ளிகளுக்கு** மேல் சித்தி பெற்ற **27 மாணவர்களையும்** (54% சித்தி) 100 **புள்ளிகளுக்கு** மேல் பெற்ற **49 மாணவர்களையும்** (98% சித்தி) 70 **புள்ளிகளுக்கு** மேல் பெற்ற **50 மாணவர்களையும்** (100% சித்தி) பாராட்டி வாழ்த்துவதுடன் மாணவர்களின் வெற்றிக்கும், சித்திக்கும் உறுதுணை புரிந்த அனைத்துப் பணிக்குழாமினருக்கும் நன்றி கலந்த பாராட்டுக்கள்

இன்று மாகாண மட்டத்தில் கௌரவிக்கப்படும் அதிபர், ஆசிரியர்களை மனதார வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்

**பாடசாலைச் சமூகம்,**
**யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி.**

(13509)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 . 01 . 1935



விண்ணில் 01 . 12 . 2021

## அமரர் சேதுநாயகம் வினாசிதம்பி

**(இளைப்பாறிய கிராமசேவகர்)**

ஆண்டு ஒன்று போனதையா உங்கள்
அழியா நினைவில் அபலைகள் நாம்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! நீங்கள்
அணைந்த நாளிலிருந்து எங்கள் வாழ்க்கை
இருள் சூழ்ந்து கிடக்கிறது
எங்கள் பிரகாசமான வாழ்க்கைக்கு
முதல்வராகவும் எங்கள் குடும்பத்தின்
ஆணிவேராகவும் இருந்தீர்கள் உங்களை
இழந்தபின்பு வேர் அறுந்த மரங்களாக
வாடி வதங்குகின்றோம்
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது
உங்கள் பிரிவு காலம் பல கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவு

ஓம் சாந்தி ஓம் சாந்தி

(13478) தகவல் குடும்பத்தினர்



# சிங்கள மொழி கற்போம்

அனைவருக்குமானது மிக இலகுவான முறையில் இலவச மற்றும் குறைந்த செலவுடன் முழுமையான பயிற்சி வழங்கப்படும். அதற்கான முழு பொறுப்புடன் உத்தரவாதம் எம்மிடம் உள்ளது. தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யுங்கள்.

**077 345 0645**

(13497)



# சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளிற்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (Pvt) LTD**

**076 250 0098**

(13489)



# மணமக்கள் தேவை

1. 1990 சுவிஸில் வசிக்கும் சித்திரை 2 ஆம் பாத நட்சத்திர ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.
2. 1995 கனடாவில் வசிக்கும் உத்தராட நட்சத்திர ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.
3. 1994 கனடாவில் வசிக்கும் விசாக நட்சத்திர பெண்ணிற்கு உள்நாட்டில் மணமகன் தேவை.
4. 1985 லண்டனில் வசிக்கும் ரேவதி நட்சத்திர Divorce ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.

சொர்க்கம் திருமண சேவை

**001 416 666 1855, 077 887 6969**

(13502)



# துயர் பகிர்கின்றோம்

எமது சிறிய தாயார்

**திருமதி இலட்சுமிதேவி சண்முகானந்தன்**



அவர்கள் 13.11.2022 அன்று கனடாவில் மறைந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தோற்றம் 11.07.1939 மறைவு 13.11.2022

துயரில் பங்குகொள்வோர்
**சோ. பாலசுந்தரக்குருக்கள் குடும்பத்தினர்**

(13510)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் உறவுகள் போராட்டம்





(நெளுக்குளம்)

வவுனியாவிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஒன்றிணைந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஜனாதிபதி மாவட்ட செயலகத்தை வந்தடைந்ததும் அங்கு ஒன்றிணைந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நீதிகேட்டு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (நி-299)

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஆளும்கட்சி தடை-மைத்திரி சாடல்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாட்டுக்கு பிரதான ஆளும் கட்சி தடையாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனில் முக்கிய நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்பட வேண்டும். மேலும் பொருளாதார பாதிப்பிற்கு யார் காரணம் என ஆராயாமல் எதிர்காலம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க கோட்டாபய ராஜபக்ஷவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புடன் செயற்பட்டாலும் ஆளும்கட்சி முட்டுக்கட்டை போடுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். (நி)

## இலங்கையர்களை கடத்த முயற்சித்தவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

துபாய் மற்றும் ஓமான் நாடுகளுக்கு இலங்கையர்களைக் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தே சந்தேக நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் அவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)

## இலங்கை அகதிகள் இருவர் வியட்நாமில் தற்கொலை முயற்சி

(ஹனோய்)

வியட்நாமில் அகதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளில் இருவர் தற்கொலை செய்ய முயன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு தற்கொலை முயற்சியை மேற்கொண்டுள்ளதாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்தவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மற்றுமொருவரின் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த 306 இலங்கையர்கள் உரிய விசா நடைமுறைகளின் பிரகாரம் மியன்மார் சென்று அங்கிருந்து கப்பல் ஒன்றின் மூலம் சட்டவிரோதமான முறையில் அகதிகளாக கனடா நோக்கிச் செல்ல முயற்சித்திருந்தனர்.

இதேவேளை தங்களை இலங்கைக்கு மீள அனுப்பும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற நிலையில் தாம் அங்கு செல்ல தயார் இல்லை என தெரிவித்தே தற்கொலை முயற்சியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 1000 மெற்றிக் தொன் அரிசி வழங்கியது சீனா

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மற்றுமொரு அரிசி தொகை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை 1,000 மெற்றிக் தொன் பொதிகள் கொண்ட அரிசி தொகை கொழும்பு துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ளது. மேலும் குறித்த அரிசி தொகை விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரை 7,000 மெற்றிக் தொன் அரிசி தொகைகள் சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் "தெய்வீகத் திருக்கூட்டம்" தொடர் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனக் கலாமண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம், ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அருளுரைகள் ஆற்றினர். மேலும் இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் கலந்து சிறப்பித்தார். (படம்:-சிவசாந்தன்)

## ஆட்பதிவுத் திணைக்களத்தின் அபராத தொகைகளில் திருத்தம்

(கொழும்பு)

ஆட்பதிவு சட்டத்தின் கீழ் சில விடயங்களுக்கான அபராதத் தொகை திருத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, 15 வயதை எட்டிய நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர்களுக்கு 2500 ரூபாய் அபராதத் தொகை அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்கள ரீதியான தாமதம் காரணமாக, முதல் விண்ணப்பத்திற்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினால் இரண்டாவது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடம் 250 ரூபாய் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

திணைக்கள ரீதியான தாமதம் இல்லாத சந்தர்ப்பங்களில் முதற்தடவையாக தேசிய அடையாள அட்டை பெறாத விண்ணப்பதாரர்களிடம் 2500 ரூபாய் அறவிடப்படுமென ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள் நிறைவடைவதற்குள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அவ்வாறு விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்களிடம் இருந்து 2500 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்கள் மற்றும் பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் உள்ளிட்ட, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய குற்றங்களுக்கும் 2500 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென ஆட்பதிவுத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## 1 ஆம் ஆண்டில் இருந்து ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆரம்பம்

(கொழும்பு)

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கில மொழியின் நடைமுறை பயன்பாடு மார்ச் 2023 முதல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் ஆரம்பமானது.

இதற்காக நாடளாவிய ரீதியில் சுமார் 450 பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு முறையான பயிற்சிகளை வழங்கிய பின்னர், அவர்கள் முதலாம் வகுப்பிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளனர்.

இந்த மாகாண ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் பின்னர், 2023 ஆம் ஆண்டின் முதலாம் தவணை முதல் நடைமுறைச் செயற்பாடுகளின் அடிப்படையில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆவது உலகக்கிண்ண கால்பந்து திருவிழா கட்டாரில் கோலாகலமாக இன்று ஆரம்பம்

22ஆவது உலகக் கிண்ண கால்பந்து திருவிழா கட்டாரில் இன்று கோலாகலமாக.தொடங்குகிறது. டிசெம்பர் 18 ஆம் திகதி வரை 29 நாட்கள் இந்த கால்பந்து திருவிழா நடைபெறும். இதில் 32 நாடுகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் கட்டார் மட்டும் நேரடியாக தகுதி பெற்றது.

மீதியுள்ள 31 நாடுகள் தகுதி சுற்று மூலம் நுழைந்தன. இந்த 32 நாடுகளும் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் விபரம்:- கட்டார், ஈக்வடோர், செனகல்; நெதர்லாந்து ("ஏ" பிரிவு). இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, வேல்ஸ் (பி). ஆர்ஜென்டீனா, சவுதி அரேபியா, மெக்சிக்கோ, போலந்து (சி). பிரான்ஸ் அவுஸ்திரேலியா, டென்மார்க், துனிசியா (டி). ஸ்பெயின், கோஸ்டாரிகா, ஜேர்மனி, ஜப்பான் (இ). பெல்ஜியம், கனடா, மொராக்கோ, குரோஷியா (எப்). பிரேசில், செர்பியா, சுவிட்சர்லாந்து, கேமரூன் (ஜி). போர்த்துக்கல், கானா, உருகுவே, தென் கொரியா (எச்). ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். டிசெம்பர் 2ஆம் திகதியுடன் "லீக்" ஆட்டங்கள் முடிகின் றன. இதன் முடிவில். புள்ளி கள் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் 2 ஆவது சுற்றான நொக் அவுட்டுக்கு தகுதி பெறும். டிசெம்பர் 3 முதல் 6 ஆம் திகதி வரை 2ஆவது சுற்று நடைபெறும்.



இதில் 16 நாடுகள் விளையாடும். அதில் இருந்து 8 அணிகள் கால் இறுதிக்குள் நுழையும். டிசெம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் கால் இறுதியும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் அரை இறுதி ஆட்டங்களும் நடை பெறும். இறுதிப் போட்டி டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெறும்.(நி)

# உலகக்கிண்ண கால்பந்து போட்டிக்கான போலி ரீ-சேட்டுகள் பொலிஸாரால் பறிமுதல்

ஐந்து இலட்சம் பவுண்டுகள் பெறுமதியான போலி, உலகக்கிண்ண கால்பந்து ரீ-சேட்டுகளை லண்டன் நகரப் படையில் உள்ள பொலிஸ்துறை அறிவுசார் சொத்து குற்றப் பிரிவு, பறிமுதல் செய்துள்ளது.


வடமேற்கு பொலிஸ் துறை அறிவுசார் சொத்து பிரிவின் உதவியுடன் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில், ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

மொத்தம், நான்கு தொன் இங்கிலாந்து ஜெர்சிகள் மற்றும் FIFA உலகக் கிண்ண பேட்ஜ்கள், 12,000 பவுண்டுகள் பணத்துடன் கைப்பற்றப்பட்டன.



உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக இலாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்ட குற்றவாளிகளை குறி வைக்கும் சோதனை நடவடிக்கையாக இது அமைந்தது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# இந்திய கிரிக்கெட் அணியின்
## நிரந்தர தலைவராக ஹர்திக் பாண்டியா



இந்தியக் கிரிக்கெட் அணி யின் நிரந்தர தலைவராக ஹர்திக் பாண்டியா நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இடம்பெற்று வரும் நியூசிலாந்து அணிக் கெதிரான தொடரில் ஹர்திக் பாண்டியா தலைவராக செயற்படுகிறார்.

எனினும் அவரை நிரந் தரமாக இந்தியக் கிரிக்கெட் அணிக்கு தலைமை தாங்க வைக்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தீர்மானித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள ஒரு நாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட் தொடருக்கு முன்ன தாக, இந்தியக் கிரிக்கெட் அணி தேர்வாளர்கள் ஒன்று கூடி இந்தத் தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளனர்.

இந்திய அணியின் தலைவராக செயற்படும் ரோஹித் சர்மா கடந்த இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் பின்னர் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த நிலையில் இந்த தக வல் வெளியாகியுள்ளது.

நியூசிலாந்து மற்றும் இந் திய அணிகளுக்கிடையில் இடம்பெறும் 3 போட்டிகளை கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடரின் தலைவராக ஹர்திக் பாண்டியா செயற்படுகிறார். (நி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆதனப் பெயர்மாற்றம்

இல 11. 6 ம் குறுக்குத் தெரு. குருநகர். யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 02 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் A.முடியப்பு பெண் அன்னம்மாவும் யோண் பெண் றெபேக்காவும் என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு யூல் பிலைன் அன்ரன் றஞ்சித்குமார் முகதாவில் 01.09.2021 ஆம் திகதிய 400 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உரித்துப் பிரகடன உறுதி மூலம் லூயிஸ் அன்ரனி. பீற்றர் வில்சன் பெண் அன்னம்மா. லூயிஸ் பீற்றர் வில்சன். கொஸ்மஸ் நித்தியராஜ்ன். ஜீவதாசன் பெண் ஜறின் றசிந்தா. செபமாலை ஜீவதாசன். இராஜசேகரம் கைம்பெண் மேரி கவிதா. கொஸ்மஸ் செல்வராசன். கொஸ்மஸ் ஜெகதீஸ்வரன். கொஸ்மஸ் டொனால் சரத். கொஸ்மஸ் கட்சன் கொன்சன்ரையின். றொசாறியன் ஜெறினோல்ட் கைம்பெண் றெஜி யூலியானா. எட்வேட் அன்பழகன் றொமெல். எட்வேட் அன்பழகன் மகள் மிதுலா. அன்ரன் குமாரகுலசிங்கம். மொஹமட் பாரூஹ் பாத்திமா சாமிலா. பிறேமலவன் மேரி கொன்ரசன்ரா. கிறிஸ்ரியன் ஷிவாந்தன். பிரான்சிஸ் சேவியர் பெண் றோகினி. குணதாஸ் பிரான்சிஸ் சேவியர். அன்ரனி பேணாட் பெண் டொறின். கிறிஸ்ரியன் பிரியாந்தன். கிறிஸ்ரியன் மகள் அருள்நிசா. வலோரி அன்ரன். வலோரி சகாயநாயகி. ஜெறாட் பெண் டல்சியா. கொன்ஸ்ரன்ராயின் பெண் லூர்த்துநாயகி. அல்போன்ஸ் கொன்ஸ்ரன்ராயின். சவிரியான் கிறிஸ்ரியன் பேனாட். சவிரியாம்பிள்ளை சகாயநாதன். யூட்றொபேட் வில்லியம் பெண் லக்ஸ்மாலா. சவிரியான் யூட்றொபேட் வில்லியம். கிறிஸ்துராசா பெண் வசந்தரூபினி. அடைக்கலம் கிறிஸ்துராசா. சொவஹீனஸ் பெண் சந்தலூசியா. தேவதாஸ் ஜாக்ஸன் சொவஹீனஸ். அருள்தாஸ் அனுாஜன். அருள்தாஸ் மகள் நிவேதிகா. யேசுராசா பத்மராஜா. றொபின்சன் குரூஸ் பெண் கிளவ்டியா. சின்னப்பு றொபின்சன் குரூஸ். யேசுராசா ஆராக்கியராஜா. யேசுராசா அன்ரனிபேனாட். யேசுராசா றோச்சேஸ். இராஜசேகரன் கௌதரன். இராஜசேகரன் மகள் மேரி பிரான்சியா. இராஜசேகரம் மகள் மேரிசுஜிதா. இராஜசேகரன் மகள் மேரிதர்சிகா ஆகியோர் வெளிப்படுத்தி பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பின்னர் பிரசித்த நொத்தாரிசு தனபாலன் லாவண்யா முகதாவில் 68 ம் இலக்க 23.10.2021 திகதிய அறுதி உறுதி மூலம் மேற்கூறியவர்களால் இல.11. 6 ம் குறுக்குத்தெரு. குருநகரைச் சேர்ந்த யோண் கென்றி நியூமன் யோகநாய்கி அவர்களுக்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைத்தனர்.

ஆதன விபரம் : வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி. சுண்டிக்குளிக் கோவிற்பற்று. கரையூர் இறை. யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2. வரி மதிப்பீட்டு இலக்கம் 11. "குடியிருப்பு வளவு" பேட்சஸ் பதினொன்று (11) நில.பர.ஒன்று (01). இதில் சொரியலாக அரைப்பங்கு. ஆனால் இது எமது நிந்தமான ஆட்சிப்படியும். உத்தரவு பெற்ற நில அளவையாளர் க.கனகசபை அவர்களால் 20.12.2020 அன்று அளந்து வரைந்தளித்த 8109 ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளவாறு. அளந்து கண்டதன் படியும் நில. பர சைபர் (00) குளி பதினொன்று தசம் எட்டு இரண்டு (11.82). இதன் எல்லைகள் (குறித்த படத்தின்படி)

கிழக்கு : 6 ம் குறுக்கு வீதி
வடக்கு : ஜெயநாயகம் பவாவின் ஆதனம்.
மேற்கு : அ.வைத்தியம்மா மற்றும் T.S மைக்கல் பெண் மரியம்மாவின் ஆதனம்
தெற்கு : R.ராம்கியின் ஆதனம்.
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது குறித்த ஆதனத்தை யோண் கென்றி நியூமன் யோகநாயகி தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு முழுமையாகவோ / பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது யோகநாயகி யோண் கென்றி நியூமன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாநகர முதல்வர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(c-5294)

# தேர்தலை ஒத்திவைக்க நாடகம் போடும் அரசு

## பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தற்போது அதிகமாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தற்போதைய பிரதமர் கடந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த போது அந்த பதவிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததாக சுட்டிக் காட்டினார்.

இதேவேளை தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்றும் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார். (நி)

# பந்தயத்தில் பரிதாபமாக பறிபோன உயிர்கள்

(கொழும்பு)

பண்டாரகம - களுத்துறை பிரதான வீதியின் மொரோந்துடுவ பிரதேசத்தில் நேற்று இரவு உந்துருளிப் பந்தயத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் தாம் செலுத்திக்கொண்டிருந்த இரண்டு உந்துருளிகளும் நேருக்கு நேர் மோதியதில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 18 அகவை கொண்ட வாதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் ஏனைய இளைஞர்கள் குழுவுடன் பந்தயத்தில் ஈடுபட்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இந்தநிலையில் குறித்த இளைஞர்களுடன் உந்துருளிப் பந்தயத்தில் ஈடுபட்ட ஏனைய இளைஞர்கள் விபத்தை அடுத்து தப்பிச் சென்றுள்ளனர்.

விபத்தின் பின்னர் காயங்களுடன் இரண்டு இளைஞர்களும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். (நி)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் பிரதி அதிபராகப் பணிபுரியும்
திருமதி. மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின்
பாசமிகு தந்தையார்
அமரர். திரு.
**சுப்பிரமணியம் தேவராஜா**
அவர்கள் 18.11.2022 அன்று
காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(13500)

ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


## இராசிபலன்

20.11.2022
கார்த்திகை 04 , ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி முற்பகல் 8.22 மணிவரை

அத்தம் முன்னிரவு 11.13 மணிவரை
சுபநேரம் -9.09-10.39 மணிவரை
இராகுகாலம் 4.39-6.09 மணிவரை

ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
உத்திரட்டாதி

**வள்வன்**




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏற்படலாம்.




பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கலாம்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்,சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், சயன சுகக்குறைவான நாள்.




சகோதர ஒற்றுமையே லோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் பேசும்போது கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பிரயாண பயமுண்டு.




மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது நல்லது.

மகிழ்ச்சி சகல நோய்களையும் தீர்க்கும் அற்புத மருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2021 - 2022 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி சம்பத் வங்கியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. சாவகச்சேரி சம்பத் வங்கி முகாமையாளர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் வங்கி ஊழியர்கள் மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்-சிவசாந்தன்)



சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் நீரிழிவு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கடந்த புதன்கிழமை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கு நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு யாழ். போதனா மருத்துவமனையின் நீரிவு கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது. (படம்- கஜிந்தன்)



வடக்கில் சினிமா துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் கலைஞர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது. இதில் சிறப்பு வளவாளராக சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் "கோச்சடையான்" உள்ளிட்ட பல படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றிய சூரியப்பிரதாப் பங்கேற்றார். மேலும் யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம், யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ரதிதரன் மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்த சினிமா செயற்பாட்டாளர் அருள் பொன்னையா உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர். (படம்- சிவசாந்தன்)



யாழ்ப்பர்ணம் தலைமையக பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்று இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)



சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டதுடன் மாணவர்களுக்கான நூலக கண்காட்சி [illegible]வும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்-சுபேசன்)

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவகங்களில் திடீர் பரிசோதனை !

## தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்கள் யாழில் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள உணவகங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடத்திய திடீர் பரிசோதனை நடவடிக்கையில் தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் சுகாதார சீர்கேடுகள் தொடர்பிலும் எச்சரிக்கப்பட்டன.**





நேற்று சனிக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாநகரில் அமைந்துள்ள உணவகங்களில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

குளிர்சாதனப் பெட்டியில் சுகாதார சீர்கேடாகவும் தீங்கு விளைவிக்கும் வகையில் வைத்திருக்கப்பட்ட மீன், இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டன.

அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான நிறமூட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களும் அழிக்கப்பட்டன.

அத்துடன் உணவகம், ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் எடுத்துரைத்ததுடன் இரண்டு வாரங்களுக்கு அனைத்தும் சீர் செய்யப்படாவிடின் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்என்று உணவக உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-33-104)

## போஷாக்கை மேம்படுத்தும் வேலைத்திட்டம் போக்கட்டி அ.த.க பாடசாலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/போக்கட்டி அ.த.க பாடசாலை மாணவர்களின் போஷாக்கை மேம்படுததும் வேலைத்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன் மற்றும் தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத் தலைவர் ஆனந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களின் போஷாக்கினை மேம்படுத்தும் முகமாக இலைக்கஞ்சி மற்றும் சத்துமா ஆகியன வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் மனைப்பொருளியில் டிப்ளோமா தரச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி கற்கைநெறியை யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் க.பொ.த சாதாரண தரம் படித்த 18-35 வயதுக்குட்பட்டோர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 10.12.2022 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (நி)

## ஆவணப்படங்கள் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட உள்ளன. இந்த ஆவணப்பட விழாவில் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற பதின்னா[illegible] ஆவணப்படங்கள் [illegible] (நி-33-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 420 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 150 | 130 | 200 | 200 |
| தக்காளி | 400 | 350 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 150 | 160 |
| கோவா | 400 | 250 | 280 | 320 |
| கரட் | 350 | 380 | 500 | 500 |
| பூசணி | 160 | 150 | 140 | 200 |
| புடோல் | 280 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 150 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 500 | 450 | 550 | 600 |
| பெரிய வெங்காயம் | 360 | 320 | 320 | 350 |
| பாகற்காய் | 600 | 400 | 450 | 500 |
| வெண்டிக்காய் | 180 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 130 | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 380 | 500 |
| லீக்ஸ் | 400 | 350 | 360 | 500 |
| பீற்றூட் | 260 | 300 | 280 | 400 |
| கறிமிளகாய் | 700 | 750 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | — | 380 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 350 | 450 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 300 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 600 | — | 400 | 500 |
| முள்ளங்கி | 160 | 120 | 160 | 280 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 120 | 130 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 371

Viber 076 636 3378



## தமிழ் அரசியல்வாதிகள்

# சுயநல அரசியலை மறந்து

# ஒன்றுபட வேண்டிய நேரமிது

**“ சுயநல அரசியலுக்காக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை குழி தோண்டிப் புதைத்தது போதும். தமிழினத்தின் தீர்வுக்காகவேனும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழினத்தின் விருப்பமும். ”**

அபிமன்யு

நாம் சிறுவர்களாக இருக்கும் போது பாடப் புத்தகத்தில் ஒரு கதையை மிகுந்த ஆர்வத்துடன் படித்தோம்.

ஒற்றுமையாக விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுக்குள் சிறு பிரச்சினை ஏற்படுகிறது. அதன் பின் அவர்கள் ஆளாளுக்கு பிரிந்து நின்று மல்லுக் கட்டுகிறார்கள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த தாத்தா அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களை அழைக்கின்றார்.

ஒவ்வொருவரிடமும் சிறு குச்சியை வழங்குகிறார். ஏன் தாத்தா குச்சியைத் தந்தீர்கள் என்று சிறுவர்கள் தாத்தாவிடம் ஆர்வத்துடன் கேட்க, எங்கே இதை முறியுங்கள் பார்ப்போம் என்றது தான் தாமதம் அனைவரும் குச்சியை மிக இலகுவாக முறித்து தாத்தாவின் கையில் கொடுத்தார்கள்.

சிரித்த தாத்தா மீண்டும் சில குச்சிகளை எடுத்து அவற்றை ஒன்றிணைத்துக் கட்டிவிட்டு எங்கே இதை ஒடியுங்கள் பார்ப்போம் என்று சிறுவர்களிடம் கொடுத்தார்.

சிறுவர்களும் ஆர்வமாக வாங்கி ஒன்றிணைந்த குச்சிகளை முறிக்க முயற்சித்தார்கள்.

ஆனால் அவை ஒடியவே இல்லை. அனைவரும் முயற்சித்து களைத்துப்போய் இனி எங்களால் முடியாது என்று தரையில் அமர்ந்து கொண்டனர்.

அதன்பின் தாத்தா பேசத் தொடங்குகிறார். சிறுவர்களே இந்த குச்சிகள் தனித்தனியாய் இருக்கும் போது மிகவும் இலகுவாக ஒடித்தீர்கள்.

ஆனால் அவற்றை ஒன்றாய் இணைத்த பின்னர் உங்களால் அதை ஒடிக்க முடியவில்லையே ஏன் என்று கேட்டார். சிறுவர்கள் தாத்தாவின் பதிலுக்காக காத்திருக்க தாத்தா மீண்டும் பேசத் தொடங்கினார்.

குச்சிகள் தனித்தனியே இருக்கும்போது பலம் குறைவு. அதனால் அவற்றை ஒடித்து விடலாம். ஆனால் அவை ஒன்றுசேர்ந்து விட்டால் அதன் பலம் மிக வலிமையானது. எவராலும் ஒன்றும் செய்துவிட முடியாது என்றார்.

இதுபோலத்தான் நீங்களும் சிறுசிறு சண்டைகளைப்பிடித்து பிரிந்து நிற்காமல் ஒன்றுசேர்ந்து நின்றால் பலம் அதிகம் என சிறுவர்களுக்கு வாழ்க்கையின் தத்துவத்தை மிக எளிமையாக விளக்கினார்.

இவை நாம் அனைவரும் அறிந்த கதைதான். ஆனாலும் இந்த இடத்தில் எம் தமிழினத்துக்கு இக்கதை மிகப் பொருத்தம். எம் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு மிக மிகப் பொருத்தம். ,




தேர்தல் காலங்களில் பேசும் பேச்சுக்களை மறந்து தமது சுயநல அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் எம் இனத்தின் அர்சியல்வாதிகள் இருக்கும் வரைக்கும் தமிழினத்துக்கான தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது உறுதி.

காலம் காலமாக தமிழினம் உங்களை நம்பி வாக்களித்தாலும் அவர்கள் வாக்களித்ததுக்கான நன்றிக்கடனை தீர்த்துள்ளீர்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமை.

ஆனால் அவை எவற்றையும் சிந்திக்காமல் வெறும் அரசியல் சுய இலாபங்களுக்காக தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை அடகுவைப்பது எந்த வகையிலும் நியாயமாக அமையாது.

பதவிக்காகவும் அதிகாரத்திற்காகவும் பிரிந்து நின்றீர்கள். சரி போகட்டும் என்று விட்டுவிட்டார்கள் தமிழ் மக்கள். ஆனால் தமிழினத்திற்கான தீர்வு ஒன்று வருகின்றது என்கின்ற போது கூட பிரிந்து நிற்கின்றீர்கள் எனின், உங்களைப் போல சுயநல வாதிகள் இந்த உலகில் இருக்க மாட்டார்கள் என்பதே ஒட்டுமொத்த தமிழினத்தின் முடிவாக அமைகிறது.

தமிழினம் நாடு கேட்டு போரிட்டதன் விளைவு முள்ளிவாய்க்காலுடன் முற்றுப் பெற்றுவிட்டது. அதுவரை தமிழினம் பட்ட துன்ப -துயரங்கள் சொல்லி மாளாது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் கொத்துக் கொத்தாய் எத்தனையாயிரம் தமிழ் மக்கள் மடிந்து போயினர்.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்கள் அதை வெறும் அரசியலுக்காக பயன்படுத்தும் நாடகத்தை எவ்வாறு ஏற்பது. தற்போது கூட தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு முனைப்புக் காட்டுவது புலப்படுகிறது.

சர்வதேசத்தின் அழுத்தமோ, இந்தியாவின் கடும் கோரிக்கையோ இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு இலங்கை அரசு முன் வந்திருக்கிறது.

இந்த நேரத்தில் தமிழராகிய நாம் என்ன செய்ய வேண்டும்.

தமிழ் புத்திஜீவிகளை ஒன்றிணைத்து நாம் எவ்வாறு எமது மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பது? அதற்கு எவ்வாறான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்? இந்த விடயங்களை நகர்த்துவதற்கு குழுக்களை அமைத்து அதனூடே தீர்வுத் திட்டத்தை முன்வைத்து, சர்வதேசத்தின் அனுசரணையூடாக எமக்கான தீர்வை பெற்றுக் கொள்ள வழி செய்யாமல் ஆளாளுக்கு அணி அணியாக கன்னை பிரித்து அடிபட்டால் பலன் கிட்டுமோ?

இவை தமிழ் மக்கள் மீது நீங்கள் கொண்ட பற்றை வெளிக்காட்டுமா? அல்லது உங்கள் பதவி மீது நீங்கள் கொண்டுள்ள மோகத்தைப் பறை சாற்றுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதை நாம் கூறும் போது, இல்லை எமக்குள் எந்தப் பிளவும் இல்லை, பிரிவும் இல்லை என்று கற்பூரம் அணைத்து சத்தியம் செய்வீர்கள்.

அடக்கறுமமே கற்பூரம் அணைத்து சத்தியம் செய்வதிலேயே புரிகிறது. உங்களுக்குள் அணிகள் உண்டென்று.

கிடைத்திருக்கும் இந்தப் பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்திப் பல தசாப்தங்களாக நிர்க்கதியாய் நிற்கும் தமி ழினத்தின் பிரச்சினையை தீர்த்து தமிழினம் தனது தாய் நிலத்தில் நிம்மதியாக வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும்.

இல்லையேல் உங்களை காலம் ஒருநாள் தண்டித்தே தீரும்.இது ஒவ்வொரு தமிழினத்தின் ஆத்மாவின் குரல் என்பதை தயவு செய்து மறந்துவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:** அதுசரி எங்கட சாத்திரியார் இப்பவும் கொஸ்பிற்றறில தானோ? மூப்பர் விசாரித்தார்.

**கங்காணி:** இப்ப சாத்திரியார் வீட்டிற்கு வந்திட்டார். இன்னும் நல்ல சுகம் இல்லை.

**சிறாப்பர்:** எதுக்கும் கவனமாக இருக்க வேணும். மாரி காலத்தில மழையும் பனியும் சேர்ந்து வயது போனவர்களைப் பதம் பார்த்துப் போடும். அதோட இப்ப மருந்துகளுக்கும் ஏகப்பட்ட காசு.

**விதானையார்:** அதெண்டால் உண்மைதான். சில பார்மஸியள் மருந்துகளுக்கு நினைச்ச பாட்டில விலை சொல்லுசினம். இதால நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கு.

**சிறாப்பர்:** அதுசரி இந்தப் பார்மஸியளுக்கு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் போறதில்லையோ. விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஒருக்கா பார்மஸிகளைப் பரிசோதித்தால் மருந்துகளின்ர விலை, கட்டுப்பாட்டிற்கு வந்துவிடும்.

**வாத்தியார்:** நேர்மையாக நடக்கிற பார்மஸியள் எங்கட மண்ணில இருக்கின்றன. அவற்றின் மீது மக்களும் மிகுந்த நன்மதிப்புக் கொண்டிருக்கினம்.

இருந்தும் ஒருசில பார்மஸியள் நோயாளர்களிட்ட இருந்து காசைப் பறிக்கிறதால எல்லாப் பார்மஸியளுக்கும் அவப்பெயர் ஏற்படப் பார்க்குது. ஆகையால, விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இது விடயத்தில கவனமெடுத்து மருந்துகளின்ர விலைகளை கட்டுப்பாட்டில வைத்திருக்கச் செய்ய வேணும்.

**கங்காணி:** நீங்கள் இதைச் சொல்லுறியள். ஆனால் சில தனியார் வைத்தியசாலைகளில உள்ள பார்மஸிகளில தான் மருந்துகளின் விலைகள் அதிகம் எண்டும் அந்தத் தனியார் வைத்தியசாலைகளுக்குப் போனால், அவர்கள் கொப்பியை நோயாளர்களிட்ட இருந்து பறிச்சு தங்கட பார்மஸி மருந்தைத்தான் கொடுப்பினம் எண்டும் சனம் கதைக்குது.

**மூப்பர்:** அப்படிச் செய்யிறது பெரும் பிழை. அவரவர் தாங்கள் விரும்பின பார்மஸிகளில மருந்தை வாங்குவதற்கு அனுமதிக்க வேணும்.

இதைவிட்டிட்டு தங்களிட்டத்தான் மருந்து வாங்க வேணும் எண்டு அடம்பிடிக்கிறது அவ்வளவு நல்லதல்ல.

இவ்வாறு ஆலடியில் கதைத்துக் கொண்டிருக்க, வாத்தியார் வைத்திலிங்கம் தனது கையடக்கத் தொலைபேசியில எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

இதை அவதானித்த பண்டிதர் பரமலிங்கம் என்ன வாத்தியார் இந்தக் காலத்துப் பிள்ளையள் மாதிரி போனுக்குள்ள உலகத்தைத் தேடுறியள் போல என்ன சங்கதி.

**வாத்தியார்:** நான் போனுக்குள்ள உலகத்தைத் தேடல்ல; எங்கட ரகுபதி சர்மாவுக்கு விடுதலை கிடைச்சிருக்குதல்லோ. அதுதான் ரகுபதி சர்மாவோட ஒருக்காக் கதைப்பம் எண்டு அவற்ற நம்பரைத் தேடுறன்.


22 வருசம் சிறையில இருந்த ஒரு அந்தணச் சிவாச்சாரியர் அவர். இருந்தும் எங்கட தமிழ் அரசியல்வாதிகள் அவரின்ர விடுதலை தொடர்பில எந்தக் கரிசனையும் காட்டவில்லை. அவர் சிறையில இருந்த போது அகில இலங்கை இந்துமா மன்றமும் அந்தணச் சிவாச்சாரியார் சமூகமும் தான் அவருக்கு உதவியிருக்கினம்.

மற்றும்படி உறவுகளின்ர தொடர்புகளையெல்லாம் இழந்து அவற்ற சிறை வாழ்வு கழிஞ்சு போயிருக்குது. அவருக்கு ஜனாதிபதி ரணில் பொதுமன்னிப்பு வழங்கினதையிட்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

எங்கட நாட்டில ஒரு அந்தணச் சிவாச்சாரியார் அரசியல் கைதியாக இருந்ததைக் கூட எங்கட தமிழ் அரசியல்வாதிகள் மறைச்சுப் போட்டினம்.

**விதானையார்:** அதெண்டால் உண்மைதான். தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில உயிரிழந்த சிவாச்சாரியார்கள் எத்தனையோ பேர் இருக்கினம்.

வேலணை முடிப் பிள்ளையார் கோவில் பிரதம சிவாச்சாரியார் இராணுவத்தால சுட்டுக் கொல்லப்பட்டவர். இதுபோல பலரைக் குறிப்பிடலாம். ஆனால், எங்கட தமிழ் அரசியல் கட்சிகள் அதுபற்றி ஒருக்காலும் பிரஸ்தாபிக்க மாட்டினம்.



## இந்த ஜென்மத்தில தமிழ் தரப்புகள் ஒன்றுபடாயினம்

எந்தளவுக்கு அவற்றை மறைப்புச் செய்ய முடியுமோ அந்தளவுக்கு அதனை மறைப்புச் செய்து போடுவினம்.

**வாத்தியார்:** அப்படித்தான் ரகுபதி சர்மாவின்ர நிலையும். இருந்தும் ரகுபதி சர்மாவின்ர இறை பிரார்த்தனை அவருக்கு விடுதலை வழங்கியிருக்குது. இந்த இடத்தில ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ரகுபதி சர்மாவுக்கு விடுதலை வழங்கலாம் என்று கூறிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஆலடியில நன்றி தெரிவிக்க வேணும்.

அதேநேரம் விடுதலை பெற்ற ரகுபதி சர்மா தமிழகத்தில இருக்கக்கூடிய தன்ர குடும்பத்தோட ஒன்று சேருவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேணும் எண்ட தீர்மானத்தையும் ஆலடியில நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்தத் தீர்மானமும் ஆலடியில ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மீண்டும் ஆலடியில அமைதி. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** அதுசரி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகிற விடயத்தில தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுசேருவினமோ.

**பண்டிதர்:** இந்த ஜென்மத்தில நடக்காத காரியம் அது.

**மூப்பர்:** என்ன இருந்தாலும் ராஜபக்ஷ தரப்பை எப்படிச் சிங்கள மக்கள் இனங்கண்டினமோ அதுபோல எங்கட தமிழ் அரசியல் கட்சிகளைப் பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிஞ்சிட்டினம். அடுத்த பொதுத் தேர்தலில அதுக்குரிய பாடம் புகட்டப்படும்.

**கங்காணி:** எங்கட தமிழ் மக்கள் எங்கட அரசியல்வாதிகளைப் புரிந்திட்டினம் என்பதை நான் ஒருபோதும் ஏற்க மாட்டன்.

ஒவ்வொரு அரசியல் கட்சிகளையும் கடுமையாக ஆதரிக்கிறவர்களுக்குப் பின்னால ஓர் அரசியல் நோக்கம் இருக்குது.

எதிர்காலத்தில தாங்களும் தேர்தலில நிற்கிறதுக்காக கண்டபாட்டில தங்களுக்கான அரசியல் தரப்பை ஆதரிக்கிறவியள் இருக்கும் வரை எங்கட அப்பாவித் தமிழ் மக்களுக்கு விடிவும் இல்லை, விமோசனமும் இல்லை.

இவ்வாறு கங்காணியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப் போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டுக்கழிவுகளை வீதியில் மனச்சாட்சி இல்லாமல் கொட்டுபவர்களை யார் தான் தண்டிப்பது வியாசரே?

**ராம்ராஜ் — மல்லாகம்**

**காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது பார்த்தீர்களா வியாசரே?**

பாடசாலையில் ப்றி பாடவேளை ஓடும் நேரத்திற்கும் கணித பாடவேளை ஓடும் நேரத்திற்கும் வித்தியாசம் உண்டல்லவா? அதேபோல பாடசாலை முடியும் கடைசி பத்து நிமிடம் பத்து மணித்தியாலங்கள் போல உணர்வு ஏற்படும் அல்லவா?
காலம் வேகமாக ஓடவில்லை. மனிதன் தான் இயந்திர வாழ்க்கைக்கு தன்னைப் பழக்கப்படுத்தி இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்கிறான்.
ஆனால் காலம் வேகமாக ஓடுகிறது என காலத்தின் மீது பழி சொல்கிறான்.

**அகிலன் — கனகராயன்குளம்**

**ஐயா வியாசரே! மீண்டும் விடுதலைப் புலிகள் வந்தால் மக்கள் திருந்து வார்களா?**

இது ஒரு நல்ல கேள்வி. என்னையும் உங்களையும் நான்காம் மாடிக்கு போக வைக்கக்கூடிய கேள்வி. அதனால் இக் கேள்விக்கு வேறொரு பதில் தருகிறேன்.
இலங்கையில் இனங்களுக்கிடையில் பிரச்சினை ஏதும் இல்லை. ஈழத்தமிழரிடத்தே சாதிப் பாகுபாடு இருக்கிறது. அதுதான் அங்கே பிரச்சினை என அரசு தரப்பு ஐ.நாவில் கூறியிருக்கிறது.

**மதுவன் — மீசாலை**

**கலைஞரின் அடுக்குமொழி வசனத்தில் கடல் நீர் ஏன் உப்பாய் இருக்கிறது என்பதற்கு பொருள் கூற முடியுமா?**

கலைஞர் கருணாநிதி மிகச் சிறந்த சீர்திருத்தவாதி. அவரின் அடுக்குமொழி வசனங்களில் அர்த்தங்கள் நிறையவே பொதிந்திருக்கும். அதனால் தான் அவருக்கு "கலைஞர்" என்ற பட்டத்தை வழங்கியிருக்கிறார்கள்.
அந்தப் பட்டம் அவரைத்தவிர வேறு யாருக்கும் பொருத்தமாக மாட்டாது. "கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது? சொந்த நாட்டிலே வாழ முடியாமல் அயல் நாட்டுக்கு சென்று வாழும் மக்கள் அழுது அழுது சேர்ந்த கண்ணீரால் தான் கடல் நீர் உப்பாக இருக்கிறது."
சொந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் மக்களின் அவலத்தை அருமையாகக் கூறி இருக்கிறார் கருணாநிதி.
புலம்பெயர்தலின் அவலத்தை இதைவிட வேறு எந்த மொழியினாலும் கூறிவிட முடியாது. அவ்வளவு அருமை.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**சம்பிதன் — வதிரி**

**அன்பினால் இந்த உலகை ஆள முடியுமா வியாசரே?**

அன்பினால் தான் உலகை ஆள முடியும். ஆனால் அதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் இடம்கொடுக்க வேண்டுமே.
ஒருவரிடமிருக்கும் நல்ல குணங்களை பலவீனமாகப் பார்க்கும் சமூகமே இந்த சமூகம்.
ஒருவர் அமைதியாக இருந்தால் அவரின் தலையின் மேல் ஏறி நின்று ஆடும் அளவில் நிலை இருக்கும் .
நாகங்கள் இல்லாத ஊரில் நாக்கிளி புழுக்கள் படம் எடுத்த கதையாய் நாக்கிளிப்புழுக்களின் அட்டகாசம் அதிகரிக்கத் தொடங்கி விடும்.
ஆதலால் அன்பு காட்டுபவர்களிடம் அன்பையும் அடங்காதவர்களிடத்தே அதிகாரத்தையும் காட்டித்தான் ஆக வேண்டும்.
இல்லையேல் இந்த உலகம் நல்லவர்களின் தலையில் உள்ளி மிளகு அரைத்துவிடும்.



கலைஞரின் அடுக்குமொழி வசனத்தில் கடல் நீர் ஏன் உப்பாய் இருக்கிறது என்பதற்கு பொருள் கூறமுடியுமா?

**சுதன் — குப்பிழான்**

**வெளிநாடுகளிடம் காசு வாங்குவதற்காக தமிழினத்திற்கான தீர்வை தருவதாக அரசாங்கம் தமிழ்க் கட்சிகளை ஏமாற்றுகின்றதே?**

பல வருடங்களாக ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழினத்தை ஏமாற்றி விட்டார்கள் என்பதே உண்மை.
அதிலும் பல கோடிகளை வாங்கி விட்டு தமிழினத்திற்கு எதிரான அரசின் செயற்பாடுகளுக்கு கை உயர்த்தியவர்களில் பலர் எம் அரசியல்வாதிகளில் உண்டு என்பதும் உண்மை.
ஆனால் இன்று நிலை அவ்வாறு இல்லை. சர்வதேசம் ஈழத்தமிழர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என உறுதியாய் நிற்கிறது.
இலங்கை அரசும் அதற்கு விருப்பம் கொள்கிறது. ஆதலால் காலம் தாழ்த்தாது தமிழினத்திற்கான பிரச்சினையை .தீர்க்க அனைவரும் ஒன்றிணைவதே சிறந்தது.

**தருஷ் — யாழ்ப்பாணம்**

**மரவள்ளிக்கிழங்கு சாப்பிட்டு அலுத்துப்போய் விட்டது வியாசரே என்ன செய்ய?**

மரவள்ளிக்கிழங்கு தான் எம்மிடம் இருக்கிறது என்றால் தினமும் சாப்பிட அலுக்கத்தான் செய்யும்.
ஆதலால் அவற்றை வெட்டிக் காய வைத்து மாவாக்கி பிட்டு அவித்து சாப்பிடலாம். கறி வைத்து சாப்பிடலாம். சம்சா செய்து அதற்குள் மரவள்ளிக் கறியை வைத்து சாப்பிடலாம்.
மெல்லிய சீவலாக சீவி எண்ணெயில் பொரித்து உப்பு, தூள் பிரட்டி சாப்பிடலாம்.
சீனிபோட்டு களிக்கிண்டி சாப்பிடலாம். எலும்பு நீக்கிய கோழி இறைச்சியைச் சேர்த்து களிக்கிண்டி சாப்பிடலாம்.
இவ்வாறு பல வகையுண்டு. ஆனாலும் துண்டு துண்டாக வெட்டி அவித்து அம்மியில் அரைத்த சம்பலுடன் சாப்பிடும் சுவை வேறு எதிலும் இருந்திடாது. அது அமிர்தம்.

**சிவராசா — கைதடி**

**வீட்டுக்கழிவுகளை வீதியில் மனச்சாட்சி இல்லாமல் கொட்டுபவர்களை யார் தான் தண்டிப்பது வியாசரே?**

வீதியில் கழிவுகளைப் போடுபவர்களை இனங்கண்டு அந்தக் கழிவுகள் அனைத்தையும் அவர்கள் வீட்டின் முன் கொண்டு போய் கொட்டி விடுவது நல்லது.
அல்லது அவர்களைப் பிடித்து அவர்கள் கொட்டிய குப்பைகளை மாலைகளாய்ச் செய்து அவர்களுக்கு அணிவித்து ஊர்வலமாக கொண்டு சென்று அந்த குப்பையை அவர்களைக் கொண்டே எரியூட்டச் செய்வது மிகச் சிறந்தது.
என்னைப் பொறுத்தவரை மனச்சாட்சி இல்லாமல் நடப்பவர்கள் மனிதர் என்ற வர்க்கத்துக்குள் அடங்காதவர்களே.
ஆதலால் அவர்களுக்கான தண்டனை மிகப் பயங்கரமானதாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: பாபு
இயற்றியவர்: வாலி
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்



இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

பாசமுள்ள பார்வையில் கடவுள் வாழ்கிறான்
அவன் கருணை உள்ள நெஞ்சினிலே
கோயில் கொள்கிறான்

பாசமுள்ள பார்வையில் கடவுள் வாழ்கிறான்
அவன் கருணை உள்ள நெஞ்சினிலே
கோயில் கொள்கிறான்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

அவன் பூ விரியும் சோலையிலே மணப்பான்
இசைப் பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான்
அவன் பூ விரியும் சோலையிலே மணப்பான்
இசைப் பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான்

குளிர் மேகமென தாகத்தையே தணிப்பான்
தளிர்க் கொடி விளையும் கனிகளிலே இனிப்பான்
குளிர் மேகமென தாகத்தையே தனிப்பான்
தளிர்க் கொடி விளையும் கனிகளிலே இனிப்பான்

பாசமுள்ள பார்வையில் கடவுள் வாழ்கிறான்
அவன் கருணை உள்ள நெஞ்சினிலே
கோயில் கொள்கிறான்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

பல நூல் படித்து நீ அறியும் கல்வி
பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்
இவை அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம்
இவை அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

தன் வியர்வையிலும், உழைப்பினிலும் வாழ்வை
கண்டு தொழில் புரிந்து உயிர் வளர்க்கும் ஏழை
அவன் இதழ் மலரும் சிரிப்பொலியை கேட்டேன்
அந்த சிரிப்பினிலே இறைவனை நான் பார்த்தேன்
அந்த சிரிப்பினிலே இறைவனை நான் பார்த்தேன்

பாசமுள்ள பார்வையில் கடவுள் வாழ்கிறான்
அவன் கருணை உள்ள நெஞ்சினிலே
கோயில் கொள்கிறான்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே

ஆ ஆ ஆ ஆ ஓ ஓ ஓ ஓ

# உலகம் கொண்டாடும் கால்பந்துத் திருவிழா!

தங்கமாக மின்னும் அந்த வெற்றிக்கோப்பையின் மேற் பகுதியில் தங்கத்தினாலேயே ஆன பூமிப்பந்தைச் செதுக்கி வைத்திருக்கிறார்கள். அது ஒரு குறியீடு. உலகமே கொண்டாடப் போகும் மாபெரும் கால்பந்துத் திருவிழாவிற்கான அங்கீகாரம் அது. ஆம், அளவில் சிறிய நாடான கட்டார், இந்தப் பூமிப் பந்தின் உச்சபட்ச கொண் டாட்டமான கால்பந்து உலகக் கோப்பையை நடத்த விருக் கிறது. மிகவும் பிரமாண்டமாக நவம்பர் 20 ஆம் திகதி தொடங் கும் இந்தத் தொடர் டிசெம்பர் 18 வரை நடைபெற இருக்கிறது.

2018 ஆம் ஆண்டு ரஷ்யா வில் நடந்த உலகக் கோப் பையை பிரான்ஸ் அணி வென் றிருந்தது. யாரும் எதிர்பாராத விதமாக குரோஷியா இறுதிப் போட்டி வரை முன்னேறி ரன்னர் அப் ஆகி ஆச்சர்யம் அளித்திருந்தது. உலகக் கோப் பையைப் பொறுத்தவரை பிரே சிலே அதிக ஆதிக்கம் செலுத் தியிருக்கிறது. பிரேசில் இது வரை 5 முறை உலகக் கோப் பையை வென்றிருக்கிறது. ஆனால், 2002இற்குப் பிறகு பிரேசில் கோப்பையை வெல் லவே இல்லை.20 ஆண்டுக் கால ஏக்கத்தை பிரேசில் இந்த முறை தீர்க்குமா? ஜேர்மனி, ஸ்பெயின் போன்ற பெரிய அணி கள் என்ன மாதிரியான சவாலை அளிக்கப் போகின் றன? ஓய்வை அறிவித்து விட்டு கடைசி உலகக் கோப் பையில் ஆடும் மெஸ்ஸிக்காக ஆர்ஜென்டீனா சாதிக்குமா? இப்படியாக ஏகப்பட்ட கேள்வி களையும் சுவாரஸ்யங்களை யும் இந்த உலகக் கோப்பை ஒளித்து வைத்திருக்கிறது.

நடப்பு சம்பியனான பிரா ன்ஸ் உட்பட மொத்தம் 32 அணிகள் எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குரூப் A யில் கட்டார், ஈக்வ டோர், செனகல், நெதர்லாந்து அணிகள் இடம்பெற்றுள்ளன. நெதர்லாந்து அணி ஒரு முறை கூட கோப்பையை வெல்லா விட்டாலும் மூன்று முறை இறு திப் போட்டிக்குத் தகுதி பெற்ற அணி. ரஷ்யாவில் நடந்த கடந்த உலகக் கோப்பைக்கு அந்த அணியால் தகுதி பெற முடியாமலும் போயிருந்தது. குரூப் சுற்றுகளில் நெதர்லாந்து எப்போதுமே சிறப்பாக ஆடும் அணி. மேலும், கடைசியாக ஆடியிருக்கும் 15 போட்டிகளில் தோல்வியையே தழுவ வில்லை என்கிற மிரட்டலான ரெக்கார்டுடன் இந்த முறை களமிறங்குவதால் இந்த குரூப் பிலிருந்து நெதர்லாந்து அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறுவதற் கான வாய்ப்பு அதிகம் இருக் கிறது. நெதர்லாந்தைக் கடந்து செனகல் அல்லது ஈக்வடோர் ரவுண்ட் ஆஃப் 16 இற்குச் செல்ல வாய்ப்பிருக்கிறது. போட் டியை நடத்தும் கட்டார் முதல் சுற்றோடு ஆறுதல்பட்டுக் கொள்ளலாம்.

குரூப் B-யில் இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, வேல்ஸ் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள் ளன. கடந்த ஆண்டு இத்தாலி யிடம் உதைபட்டிருந்தாலும் இங்கிலாந்து வலுவான அணியே. இங்கிலாந்து அணி யின் கப்டன் கேரிகேன் தான் கடந்த உலகக் கோப்பையில் தங்கச் சப்பாத்து விருதை வென் றிருந்தார். இந்த முறையும் அவர் முக்கியத் துருப்புச் சீட்டாக இருப்பார். இங்கிலாந்து போக ஆசியாவிலிருந்து தகுதி பெற் றிருக்கும் ஈரான், ரவுண்ட் ஆஃப் 16 இற்குச் செல்ல அதிக வாய்ப்பிருக்கிறது.

குரூப் C-யில் ஆர்ஜென் டீனா, சவுதி அரேபியா, போல ந்து, மெக்சிக்கோ ஆகிய நாடு கள் இடம்பெற்றிருக்கின்றன. சந்தேகமே இல்லாமல் ஆர்ெ ஜன்டீனா அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறும். மெஸ்ஸிக்காக ஆர்ஜென்டீனா அணி வெல்ல வேண்டும் என்கிற துடிப்பைக் காட்டக் கூடும். சர்வதேசக் கால் பந்தில் பெரிய வெற்றிகளைக் குவிக்கவில்லை எனும் மெஸ்ஸி மீதான விமர்சனங் களுமே கடந்த ஆண்டில் கோபா அமெரிக்கத் தொடரை ஆர்ஜென்டீனா வென்ற பிறகு முடிவுக்கு வந்துள்ளன.

குரூப் D-யில் பிரான்ஸ், அவுஸ் திரேலியா, துனிஷியா, டென் மார்க், ஆகிய அணிகள் இடம் பெற்றிருக்கின்றன. நடப்பு சாம் பியனான பிரான்ஸ் இந்த குரூப் பிலிருந்து முதல் அணியாக அடுத்த சுற்றுக்குச் செல்லக் கூடும். சிறந்த கால்பந்து வீரருக் கான 'பாலோன்தி' ஒரு விருதை வென்றிருக்கும் கரீம் பென்சமா மற்றும் பி.எஸ்.ஜீ அணிக்காகக் கலக்கி வரும் எம்பாப்பே ஆகி யோர் அந்த அணிக்குப் பெரும் பலமாக இருக்கக்கூடும். பிரான் ஸுடன் இணைந்து டென்மார்க்கும் ரவுண்ட் ஆஃப் 16இற்கு முன்னேறக்கூடும்.

குரூப் E-யில் ஸ்பெயின், ஜேர்மனி, கோஸ்டாரிகா, ஜப் பான் போன்ற அணிகள் இடம் பெற்றுள்ளன. ஸ்பெயின், ஜேர் மனி ஆகிய அணிகள் முன் னாள் சாம்பியன்கள். ஆக, அவர்களே இந்த முறையும் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பி ருக்கிறது. ஜேர்மனியின் ஸ்ட் ரைக்கர்கள் அந்த அணிக்குப் பெரும்பலமாக இருக்கக் கூடும். இந்த இரு அணிகளைக் கடந்து ஜப்பான் அணி நல்ல ஃபார்மில் இருப்பதால், அவர்களுமே கூட ஏதாவது ட்விஸ்ட் கொடுத்தா லும் ஆச்சர்யப்படுவதற் கில்லை.

குரூப் F-இல் பெல்ஜியம், கனடா, குரோஷியா, மொரா க்கோ ஆகிய அணிகள் இடம் பெற்றிருக்கின்றன. பெல்ஜியம் கடந்த முறை மூன்றாவது இடம் பிடித்திருந்தது. குரோஷியா ரன்னர் அப் ஆகியிருந்தது. இந்த இரண்டு அணிகளுக்குத் தான் அடுத்த சுற்று வாய்ப்பும் அதிகமிருக்கிறது.

குரூப் G-யில் பிரேசில், செர் பியா, சுவிட்சர்லாந்து, கேம ரூன் போன்ற அணிகள் இருக் கின்றன. பிரேசிலின் 20 ஆண் டுக்கால ஏக்கத்தைத் தீர்த்து மீண்டும் அந்த அரியணையில் ஏற்றும் பொறுப்பு நெய்மார், தியாகோ சில்வா போன்றோர் வசமே இருக்கிறது. பிரேசி லைத் தாண்டி சுவிட்சர்லாந்து அல்லது செர்பியா அடுத்த சுற் றுக்குத் தகுதி பெறக்கூடும்.

குரூப் H-ல் கானா, உருகுவே, தென்கொரியா, போர்த் துக்கல் போன்ற அணிகள் இருக்கின் றன. 2002 இலிருந்து போர்த் துக்கல் அணி தொடர்ந்து உல கக் கோப்பைக்குத் தகுதி பெற் றுவருகிறது. ஆயினும் கோப் பையை வெல்லும் வாய்ப்பு கிட்டவே இல்லை. ரொனால் டோவுக்கும் வயதாகிக் கொண் டிருக்கிறது. கட்டாரில் மட்டு மல்ல, உலக மெங்குமே வர விருக்கும் ஒரு மாதத்திற்குக் கால்பந்தின் கொடி தான் உயரப் பறக்கப் போகிறது. இந்தக் கொண்டாட்டத்தின் உச்சமாக மினுமினுக்கும் உலகக் கோப் பையை வெல்லப் போவது யார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை மீட்க உன்னை வாசி

பிரம்மியா சண்முகராஜா

ஓ மனிதா நீ கருவாக முன்னமே இரண்டு உள்ளங்களின் உணர்வுத் தூண்டல்கள் உனக்காக தேடலானதே அன்றே ஆரம்பம் உன் பிறப்போடு இணைப்பானதே இந்த தேடல். உன் கேட்டலில். பார்த்தலில். சுவைத்தலில். நுகர்தலில். தொடுதல் உணர்தலில். ஐம்புலன் புலனமாய் படைக்கப்பட்ட புலன்களின் தொழில் வழி நீ அறிந்து புதியன புனைந்து வாழ்வாங்கு வாழ நீ தேடித்தான் ஆக வேண்டும்.

நாம் வாழ்வை வளப்படுத்த தேட வேண்டும் என்றால் நமது எண்ணம் கல்வியை. செல்வத்தை இன்னும் ஆஸ்தியை. அந்தஸ்தை தான் முதலில் நினைவு செய்கின்றது. அதில் தவறில்லை ஆனால் வெற்றியை நோக்கி ஓடும் வழித்தடங்களை கற்கும் சூட்சுமத்தை தேட மறந்து விடுகின்றோம்.

சாதனைகளின் மாலைகளை கூட விரும்பும் நாம் படிக்கட்டுகளை ஏறித்தாண்ட எத்தணித்தும் பார்ப்பதில்லை. தேடலில் தொலைந்து கொண்டு இருக்கின்றோம் எம்மை நாம் ஏமாற்றியபடி. நாம் பிறக்கும் போதே நம்மோடு பிறந்த தேடல் உணர்வு என்பதாலே மண்ணைக் கண்டதும் வேற்று இடம் சூடு,குளிர் புரிந்து புதியதனை ஏற்க தேடலில் பிள்ளை அழுகின்றது. ஏதோ ஒன்றை தேடிப் பிடித்த ஆற்றுதலில் பற்றி கொண்ட விரல்களை இறுக்கிக் கொள்கின்றது.

இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் வெளியுலக தேடலில் கற்றலுக்காகவும் தொழிலுக்காகவும் இன்னும் பதவி பரிந்துரைக்காகவும் வாழ்வை வளம் சேர்க்கும் நோக்கில் நவநாகரீக பாதையில் நாம் ஓடி ஓடி தொடர்கின்றோம். தேடித் தேடியே காணாமலும் போய்விடுகின்றனர் பலர். எதை? ஏன்? எங்கு? எதற்காக? எப்படி தேட வேண்டும் என்பதை தேடலின் அவசியம் உணர்ந்தவர்கள் கூட தெரிந்திருப்பது அரிதாகவே உள்ளது. தேடல் வாழ்வை வளமாக்கும் என தேடுபவர்கள் வாழ்வின் வளம் என்றால் என்ன என்பதனை தெரியாமலேயே தேடிக் கொண்டிருப்பதும் உண்மை தான். நாம் தெரிந்து கொள்ள வேண்டிய தார்ப்பரியம் அனைத்தையும் நம்மில் தேட தொடங்க வேண்டும். மாற்றங்களை எம்மிடம் தொடக்க வேண்டும். தேவைகளை எம்மிடம் திருப்தி செய்ய வேண்டும்.

எது நான்? என் தேவை என்ன? என்னால் எதனை இயலுமாக கருத முடியும்? எனது உண்மை நிலை என்ன? என்பதை உணர்ந்தாக வேண்டியது நமது தேடலின் முதற்படியாக வேண்டும். நம்மில் தேடும் நாம் அனைத்திலும் கண்டு கொள்ள முடியுமானவர்களாவோம் என்பது நிச்சயம்.

எப்பொழுதும் நம் ஆற்றலை அறியாது அடுத்தவர் முயற்சிகளை பாடமாக கற்று மனனம் செய்து ஒப்புவித்து பாராட்டு பெற்று சாதனையாளராக முனைகின்றோம். என் விருப்பங்கள் என் முயற்சிகள் ஆக வேண்டும் முயலாத ஆசைகள் நிறைவேறுவதில்லை. பலர் அதிர்ஷ்டம் என்பார்கள். என்றோ ஒரு நாள் உன் முயற்சி பிரயத்தனத்தின் விளைவே உனக்கான அதிர்ஷ்டம் ஆகும். தன்னம்பிக்கை உன்னால் முடியும் என்பதனை உணர்ந்தால் முடியாதது ஒன்றும் இல்லாமலே போய் விடுவது கண்கூடு.

நம் நம்பிக்கை எப்போதும் நம் பெற்றோரை சார்ந்ததாகவோ ஆசிரியரை சார்ந்ததாகவோ இன்னும் வேறு ஒருவரை சார்ந்ததாகவோ இருப்பது நன்றன்று. அது எம்மைச் சார்ந்து இருக்க வேண்டும். என் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் அவர்களை சார்ந்தவை இல்லை அனேகமான பிள்ளைகள் பெற்றோரின் நிறைவேறாத ஆசைகளை பூர்த்தி செய்யவே எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்கின்றனர்.

நீ என்னவாக வர விரும்புகின்றாய் எனக்கு வைத்தியர்,பொறியியலாளர் என்பர் அத்துடன் இணைந்தே என் தந்தை முயற்சித்தார் முடியவில்லை என்னையாவது ஆக்கிவிடலாம் என ஆசைப்படுகின்றார். பதில் மிக நன்று. அப்போது உன் தாயின் கனவு? உன் பாட்டன் முப்பாட்டன் பக்கத்து வீட்டுக்காரனின் அடையப்படா கனவுக்கெல்லாம் ஒரே ஒரு நீயா? உனக்கான வாழ்வை நீ உன் பிள்ளைகளை கொண்டா? இல்லை பேரன் பேர்த்திகளைக் கொண்டா நிறைவு செய்யப் போகின்றாய்.

எப்பவும் மற்றவன் பாதையில் பூக்கள் இருப்பதாய் எண்ணி கோபம்,பொறாமை,எரிச்சல்களை விதைத்து நமது முயற்சிகளை குறைத்து மாயமான உலக விளம்பரங்களுக்கு எடுபடுவதனை தவிர்த்து உணர்வுகளுக்கு வேலியிடக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தேடலில் தேவையற்ற உணர்வுகள் தீயிடப்பட்டு தைரியம்,தன்னம்பிக்கை,புத்தாக்கம்,கற்பனா சக்தி, நினைவு ஆற்றல்,உதவுதல் என புதிய சக்திகளை நம்மில் புன்னகைக்க இடம் தேட வேண்டும். எரிச்சல் நம்மை எரிக்கும். பொறாமை நம்மை பொசுக்கும். இடர் தரும் எதிர்மறை உணர்வுகளை எடுத்தெறிந்து விட்டு வளம் சேர்க்கும் நேர் சிந்தனையை தேடி சேர்ப்போம். நம் இலக்கு இயலாமை கண்டறிந்து சுய ஒழுக்கம் பேணி சுகவாழ்வு காண தேடுவோம்.

நேரத்தை வினைத்தனம் செய்வதில் கவனம் தேவை. தேடலில் தள்ளி வைத்தல் தட்டிக் கழித்தலை மறந்தாக வேண்டும். புதிய சாதனைகளைப் படைக்க புத்தாக்க உணர்வை உரிய நேரத்தில் முடித்தலும் பெற்றுத்தரும் என்பது உண்மை. திட்டங்களை குறித்த கணம் ஆக்கி முடித்தல்,அழுத்தங்களை குறைத்து இலக்கினை அடைய நம்மை நடத்திச் செல்லும் மன அமைதியும் தரும். அமைதியான மனம். அன்பான உறவுகள். ஆரோக்கியமான உடல் நிலையை நமக்கு தேடித் தரும்.இவை நம்மை நாம் கண்டுகொள்ள நமக்குப் போதிக்கும். முன் மாதிரிகளை தேடும் போது நாம் எல்லை, இலக்கு, தேவை சார்ந்து முடிவெடுக்க வேண்டும்.

முயற்ச்சிப் பாதைகள் எல்லாம் மலர்களாக வெற்றி பெற வேண்டும் என்பது சாத்தியமன்று. தடைகளைத் தாண்ட மாற்றங்களை ஏற்க மறுக்காது இடைவிடா முயற்சிக்கு தேடலிட வேண்டும். குறிக்கோளில் சிந்தனை விலகாத தேடல் வேண்டும். இன்று இல்லை நாளை என்று இல்லை என்பதனை முடிவாக்குவதனை தவிர்த்து இப்பொழுதே வாழ கற்றுக் கொள்ள வேண்டும். மகான்களும் ரிஷிகளும் மாமனிதர்களும் மன்னிக்கத் தெரிந்தவர்கள். உன்னைச் சார்ந்த ஒவ்வொன்றையும் மன்னிக்க கற்றுக்கொள்.

நன்றி சொல்ல முந்திக்கொள். உன்னையே உன்னில் காண்பாய் உன்னத பிறவியாய். உன்னை கண்டபின் கோபம் கொடிய உணர்வுகள் உன்னை தொலைத்து விடும். தேடிய யாவினும் தெளிந்த உள்ளம் பெற்றபின் நாடிய யாவும் ஓடி வரும் உனைத்தேடி வாழ்வாங்கு வாழ வளம் சேர்க்க தேடு நீ மனிதத்தை.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் 2023 ஆம் ஆண்டுக்கான அண்மைய வரவு-செலவுத் திட்ட உரையில் கட்சிபேதமற்ற அரசியல் கலாசாரத்தை முன்னெடுக்க எல்லோரும் தயாராக வேண்டும் என உரை நிகழ்த்தியிருந்தார்.

அத்தோடு நாட்டின் அபிவிருத்தி பற்றியும் பேசியிருந்தார். இதில் கட்சி பேதமற்ற அரசியல் கலாசாரத்தையும் அதனுடன் இணைந்த நாட்டின் அபிவிருத்தியுமே முக்கியமான ஒன்றாக தற்போதைய ஆட்சியாளர்களுக்கு தெரிகின்றது அதில் எந்த தவறும் கிடையாது.

ஆனால் நாட்டில் சிறுபான்மை இனங்களுக்கு இடையிலான பேதங்கள், புறக்கணிப்புகள், பாகுபாடுகள், அசமந்தங்கள் என்பவற்றை பெருபான்மையின பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் தங்கள் எண்ணங்களில், வார்த்தைகளில், செயற்பாடுகளில் இருந்து முற்றாக களையும் வரை கட்சிபேதமற்ற அரசியல் கலாசாரத்தையும் மற்றும் நாட்டின் அபிவிருத்தியையும் எப்படி முன்னகர்த்திச் செல்ல முடியும் என்ற கேள்வி சிறுபான்மையின மக்களிடம் இயல்பாகவே எழுகின்றது.



இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்புகள் கடந்த கால ஆட்சியாளர்களிடம் இல்லாததன் காரணமே இலங்கைத் திருநாடு சுதந்திரம் பெற்று எழுபது ஆண்டுகளை கடந்த பின்பும் சர்வதேசத்தின் எல்லாத் தரப்படுத்தல் நிலைகளிலும் தென்னாசியாவின் அதிசயங்களில் இடம்பெறாத ஒரு நாடாக இலங்கை இன்று வரை பின் தங்கி இருப்பது கடந்த கால ஆட்சியாளர்களினுடைய ஆட்சியின் இலட்சணத்தை இது சுட்டி நிற்கின்றது.

உண்மையில் தென்னாசியாவின் அதிசயங்களில் ஒன்றாக இலங்கை மாறுவதற்கான அனைத்து இயற்கை வளங்களும் திரும்பும் திசையெல்லாம் கொட்டி கிடக்கின்றது. இதை விட வேறு என்ன வேண்டும். இலங்கை மக்களுக்கும் அதன் அரசுக்கும். இது இறைவன் தந்த கொடையல்லவா.

## நாடு முன்னேற தமிழர் பிரச்சினை தீரவேண்டும்

அதனால்தான் எம் ஈழத்துச் சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகள் கூட தமது நற்சிந்தனை பாடலிலே "வா்வியாறு சேரிலங்கை நல்ல நாடடா. நீ பாவியென்ற நாமந்தன்னை பகைத்து நில்லடா" என்று குறிப்பிடுகின்றார். இந்த நாட்டின் பெரும்பான்மையினரா்ன சிங்களவர்களும் அதன் ஆட்சியாளர்களும் இனவாதம், மதவாதம் என்ற மாயையில் இருந்து விழித்துக் கொள்ளாத வரை இலங்கைத் திருநாட்டில் இன, மத நல்லிணக்கம் என்பது அதன் பொருளாதாரத்தை விட பாரிய வீழ்ச்சியுற்ற ஒன்றாகவே எப்போதும் காணக்கூடியதாக இருக்கும் வாய்ப்பு உள்ளது.

இலங்கையை பொறுத்தவரை முதன்மையான அபிவிருத்தி என்பது இனங்களுக்கு இடையிலான, மதங்களுக்கு இடையிலான, அரசியல் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையும் புரிந்துணர்வுமே கடந்தகால ஆட்சியாளர்கள் செய்த தவறை மீண்டும் தற்போதைய அரசு செய்யாமல் இன, மத, அரசியல், பொருளாதார ரீதியாக நாட்டை மூவின மக்களின் பங்களிப்புடன் ஒரு ஸ்த்திரத்தன்மையான நிலையை நோக்கிக் கொண்டு நகர்த்துவதே கட்சிபேதமற்ற அரசியல் கலாசாரத்தையும் அதனுடன் பின்னிப் பிணைந்த அபிவிருத்தியையும் கொண்டு செல்வதற்கான சரியான மாற்று உபாயமாகும்.

சாம்-ரமேஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தரிக்குதே மனம்

பேரழகுப் பெட்டகமே
பார் புகழும் பூங்குயிலே
நீல முகில் வானில்
காட்சி தரும் வெண்ணிலவே
பாதையில் பவனி வரும் பொற்பாவையே
நேர்கொள்ளும் உன் பார்வை
நெஞ்சை வாட்டுதடி
நினைவு மயங்குதடி
வேர் பிடித்த நினைவு
வேட்கையை நீட்டுதடி
வீதியில் கண்டால்
விலகிவிட மனதில்லை
சேதியை சொல்லிட முன்
நடைகட்டுகிறாய் விரைந்து
சோதியே புன்னகைக்கு அர்த்தமென்ன?
சொல்லாயோ மனம் திறந்து

மாளந்தன், அல்வாய்.



அராலியூர் ப.தர்மகுமாரன்

## காப்பாற்ற வழியில்லையாம்



'குடு' என்றான் நண்பன் குஷியாயிருக்குமென்றான்
'எடு' என்றான் கொஞ்சமிதை ஏற்றமாயுமிருக்கு மென்றான்
'கொடு' என்றேன் நானும் நண்பனும் கொடுத்திட்டான்-இப்போ
'படு' என்றார் வைத்தியரே 'வாட்டில்' படுத்து விட்டேன்

தொகையாய் கடன் வாங்கி வகைவகையாய் அதை அழித்து
நகைநட்டு எல்லாமும் நாசமாக்கித் தொலைத்தொழித்து
வகைவகையாய் கடன்பட்டுப் பின் வங்கியிலும் கடன்பட்டு
நகைப்புக்காளானேன் நாயானேன் போதையினால்

போதையிது வேண்டாமே பொன்னான என் கணவா!
தீதை மறந்து விடு திருந்தி விடு என் துணைவா!
வாதையும் வந்து விடும் வருந்துவாய் என் புருஷா!
பேதை என் பொண்டாட்டி இதைப் பெருங்குரலில் சொன்னாளே!

உடல் தனலாய் கொதிக்குதிப்போ உள்ளம் படபடக்கிறது
குடல் குத்தி வலிக்கிறது குமட்டலும் தான் வருகிறது
நடமாட முடியவில்லை நாக்கும் கதை மறுக்கிறது
கடவுளே வந்தாலும் எனைக் காப்பாற்ற வழியில்லையாம்!

மிருசுவில் தமிழ்தாசன் , மீசாலை கிழக்கு

## விளைவே அறம்

"மழையின் விளைவே அறம்"
மழையே பொழி, மழையே பொழி
மாநிலம் செழிக்கவே பொழி
நிலமே விளை, நிலமே விளை
மக்களின் பசி போக நிலமே விளை
மனிதா உழை மனிதா உழை
உழைப்பே கமத்தின் அறுவடை
இயற்கை தேவதையே
இரங்கிக் கொண்டாளம்மா
பள்ளி மாணவனோ பசி
அள்ளி வழங்கிய அன்னையோ
கிள்ளிக் கொடுக்கவே ஏங்குகிறாள்
பொருட்களோ குறைவு, விலை அதிகம்
அறம் செய விரும்பும் அன்பு இதயங்களே
ஔவைப் பாட்டி சொன்னாரோ அதை
செய்வோம் மழையின் விளைவே அறம்



ஆறுமுகம்சிவபாதம்,
இணுவில்

## மௌனத்தின் தேடல்- 584



## அன்பும் அன்னையும்

தங்கு தடையின்றி
எங்கும் நிறைந்த
பரம்பொருளின்
பல வடிவங்களில்
தலை சிறந்தது
விலை மதிப்பில்லா
அன்பைப் பொழியும்
அன்னையர் தான்
கண்கண்ட தெய்வம்
என்பது உண்மைதான்

க.நாகராசா,
நுணாவில்.

## ஏக்கம்

அது பயங்கரமான ஒரு சம்பவம்
குழந்தை யாராலோ காப்பாற்றப்படுகிறது
அவரை, என்னை விட்டுப் போகாதீரென
ஏக்கத்துடன் அவர் தோள்களை
குழந்தை இறுகக் கட்டிக் கொள்கிறது

பி.மதுர்ஷன்,
தையிட்டி.

## அப்பா என்றால்...

அப்பா என்றால் பயமிருக்குமவர்
அன்பு கருணை அறிந்திரோம்
தப்புச் செய்தால் தண்டிக்குமவர்
தாயுள்ளத்தை அறிந்திரோம்
எப்போதாயினும் சிரிப்பவரவர்
இரக்க குணத்தை அறிந்திரோம்
அப்பா என்றால் அனைத்திற்கும்
அயராதுழைப்பவரேயாம்

சாமிபுத்திரன்,
சரவணை.

## மௌனத்தின் தேடல்- 585



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஏனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## ஏக்கத் தவிப்பு

பாசச் சுமையை தோளில் சுமக்கும் தந்தையே
பாவையவள் ஏக்கத் தவிப்பை யாரறிவார்?
பாரினிலே தாயன்புக்கீடாக வேறில்லை
சுமை தாங்கி சரிந்து விட்டால் சுகம் கூட இங்கில்லை
சுற்றத்தார் கூட முகஞ் சுழித்தே சென்றிடுவார்.

ஆ.செல்வி,
பருத்தித்துறை.

## சுமை

பத்து மாதம் சுமந்து பெற்ற தாயும்
தோளில் சுமந்து வளர்த்த தந்தையும்
வயோதிபத்தால் வலு இழக்கும் போது
வீட்டுக்குப் பாரமாய்க்கருதும் பிள்ளைக்கு
இன்றைய முதியோர் இல்லங்களே சாட்சி

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## இறுதி வரை

வாழ்வில்
பெற்ற குழந்தையை தாய் வயிற்றில்
சும்ப்பது வெறும் பத்து
மாதம் தான்
ஆனால் தந்தையோ தன் குழந்தையை
வாழ்வின் இறுதி வரை இப்படி
[illegible]

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## மழைக்காலம்

மாரி மழை பொழிந்ததினால்
ஊர்கள் எங்கும் வெள்ளக் காடாய்
விவசாயம் பொய்த்ததினால்
உண்பதற்கு உணவு இன்றி
உடுப்பதற்கு உடை இன்றி
மக்களை பற்பல நோய்கள் தாக்க
சின்னஞ்சிறு பிஞ்சுகளை தோளில் போட்டு
அடைக்கலம் தேடி ஓடும் மக்கள்

கும்பவாழியான், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## குறுக்கே புகுந்த குறுவாள்

காலத்தின் பதிவு 41

"உயிர்மீது ஆசையுள்ள எவரும் இருக்குமிடத்தை விட்டு அசைய வேண்டாம்" என்று கூறிவிட்டுத் தன் கூரிய பார்வையை நாற்புறமும் திருப்பிய இளையபல்லவன் தனக்கு உதவ எழுந்த கொள்ளையரையும் சைகை காட்டி அடக்கியதன்றி, "உட்காருங்கள். எனக்கு ஆபத்தை விளைவிக்க இவர்கள் யாராலும் முடியாது. விஷஅம்பு என் மார்பில் பாய்ந்ததே என்னைக் கொன்றதா?" என்று கேட்கவும் செய்தான்.

"இல்லை, இல்லை" என்று எழுந்தன கொள்ளைக்காரர் குரல்கள்.

"அப்படியிருக்க இந்த அற்பன் வீசிய குறுவாள் எப்படி என்னைக் கொல்ல முடியும்?" என்று மீண்டும் கேட்டான் இளையபல்லவன் கொள்ளைக் கூட்டத்தை நோக்கி. "முடியாது முடியாது" என்று கூச்சலிட்டனர் கொள்ளைக் கூட்டத்தினர். "குறுவாளெறிந்தவனைக் கொல்லுங்கள்." என்று இடையே எழுந்தது ஒரு கொள்ளைக்காரன் மனைவியின் கீச்சுக் குரல்.

"ஆமாம், கொல்லுங்கள், கொல்லங்கள்," என்று எழுந்தன பல மாதர்களின் குரல்கள்.

குழப்பம் ஏற்படும் நிலை மீண்டும் வந்தது. பதக்குகளும் சூளுக்குகளும் தங்கள் இடையிலிருந்த கத்திப் பிடிகளில் கையை வைத்தார்கள். இளையபல்லவன் குரல் பலமாக எழுந்தது. "யாரும் யாரையும் கொல்லக்கூடாது. இத்தகைய இன்ப நிகழ்ச்சியில் கொலை எனும் கோரம் தலையெடுக்கக் கூடாது. உட்காருங்கள்" என்று கொள்ளைக்காரர்களுக்குக் கட்டளையிட்ட இளையபல்லவன், "நான் இஷ்டப்பட்டிருந்தால் இந்த நால்வரும் இத்தனை நேரம் மடிந்திருப்பார்கள். இதோ உள்ள அமீரின் இடையில் இன்னும் ஐந்து குறுவாள்கள் உள்ளன. அவன் கை மின்னல் வேகமுடையது. நான் அடக்கினேன் அமீரை. இல்லையேல் இந்த நால்வரும் மண்ணில் சாய்ந்திருப்பார்கள்," என்று விளக்கி அமீரைச் சுட்டிக்காட்டினான்.

கொள்ளைக்காரர்கள் அமீரை நோக்கிப் பெரும் ஆரவாரம் செய்தார்கள். அமீர் நாடகமேடைக் கதாநாயகன் போல் இரண்டு மூன்று முறை தலை தாழ்த்தித் தாழ்த்திக் கூட்டத்தை வணங்கினான். கொள்ளையர் கரகோஷம் வானைப் பிளந்தது. தனது வலது கரத்தை உயர்த்தி அந்தக் கரகோஷத்தையும் கூச்சலையும் அடக்கிய இளையபல்லவன், "நடனம் அற்புதமாயிருக்கிறது. அதை நாம் இடையில் நிறுத்த வேண்டாம்" என்று சொல்லி நடனம் தொடங்கட்டும் என்பதற்கு அறிகுறியாக மேடையை நோக்கியும் கையை ஆட்டினான்.

"நில்!" அந்தப் பழைய சொல் மீண்டும் அதிகாரக்குரலில் ஒலித்தது. இம்முறை நடன மண்டபத்தில் நடத்தைத் துவங்கிய மஞ்சளழகியை நோக்கி. "இங்கு உத்தரவிட நீ யார்? என்று அமைதி யுடன் வினவினான் இளையபல்லவன்.

"என் பெயர் வில்லவன்" என்றான் அந்த நால்வரில் முதல்வன். அதைச் சொல்லித் தன் பயங்கர மீசையையும் ஒருமுறை தடவினான்.

பெரும் விபரீதம் நிகழக்கூடியதான அறிகுறிகள் எங்கும் தென்பட்டன. அந்தப் பெயரைக் கேட்ட சாதாரண நகர மக்கள் நடுங்கினர். கொள்ளைக்காரர்கள் முணு முணுத்தார்கள். அத்தனைக்கும் அசங்காமல் அதுவரை ஆசனத்தில் இடித்த புளியாக உட்கார்ந்திருந்த பலவர்மனும் ஆசனத்தில் சங்கடத்துடன் அசைந்தான். இந்தக் குறிகளைக் கவனித்தாலும் கவனிக்காதவன் போலவும், இருந்த இடத்தை விட்டு அசையாமலும் இளையபல்லவன் சர்வசாதாரணமாக நால்வர் தலைவனை நோக்கிக் கேட்டான். "அந்தப் பெயரில் என்ன அத்தனை விசேஷம்?" என்று.

அதுவரை கோபம் துளிர்க்காத வில்லவன் முகத்திலும் கோபம் துளிர்த்தது. "அந்தப் பெயரைக் கேட்டால் இந்த அக்ஷயமுனை வட்டாரமே நடுங்கும்." என்றான் வில்லவன் கோபத்தில் உஷ்ணம் சொற்களில் உறைந்து நிற்க.

(தொடரும்...)

---

# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு-பகுதி 1



அது மட்டுமல்லாமல் வெளி உலகம் அறியாத அபூர்வமான மூலிகைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது அமேசான் மழைக்காடு. இதனால் காட்டில் கொடிய நோய்கள் பரவினாலும் அதனை எதிர் கொள்ளும் திறன் கொண்ட உடலமைப்பைப் பெற்றுள்ளவர்கள் இங்கு வாழும் ஆதி குடி மக்கள்.

அமேசான் நதியில் டொல்பின் வகைகள் உட்பட சுமார் 3 ஆயிரம் மீன்வகைகள் உள்ளன. "கேய்மன்" என்ற ராட்சத முதலைகள், ஆபத்தான சிறுத்தை வகைகள், விஷத் தாவரங்கள், விஷமீன்கள், விஷ வெளவால்கள் மற்றும் டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சலைப் பரப்பும் விஷக் கொசுக்கள், தம்மை விடப் பலமடங்கு பெரிய விலங்கு களைக்கூட ஒரு சில நிமிடங் களில் கடித்துக் குதறி எலும் புக் கூட்டை மட்டும் விட்டு வைக்கின்ற பிரானா மீன்கள் எனப்படும் ராட்ஷச மீன்கள் ஆகியன ஏராளமாக உள்ளன. உலகின் மிகப்பெரிய மீன், மிகப்பெரிய ஆமை, மிக நீளமான அதிக எடை கொண்ட அனகொண்டா பாம்பு ஆகியன அமேசான் காடுகளில் தான் கண்டு பிடிக்கப்பட்டன. இங்குள்ள ஈல் வகை, ஈல் மீன்கள் ஏராளமான மின்சாரத்தைப் பாய்ச்சும் திறனுடையவை. ஈல் மீன்கள் பாய்ச்சும் மின்சாரத்தால் ஒரு மனிதனைக் கொன்று விட முடியுமாம்.

அமேசான் நதி சார்ந்த பகுதிகளைப் பற்றிய ஆய்வு பிரேசிலின் ரியோ டி ஜெனிரா வில் உள்ள தேசிய புவியியல் ஆய்வகத்தின் சார்பாக இந்தியாவின் கேரள மாநிலத்தில் கோழிக்கோட்டைச் சார்ந்த வாலியா மன்னத்தில் ஹம்சா என்னும் இந்திய ஆய்வாளர் தலைமையில் நடைபெற்றது.

அப்பொழுது அமேசான் நதிக்கு அடியில் சுமார் 13 ஆயிரம் அடி ஆழத்தில் ஓடும் மற்றொரு நதி கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆறு அக்ரி பகுதியில் உற்பத்தியாகி சோலிமோயஸ், அமேசானா, மாராஜோ தீவுகள் உள்ளிட்ட பகுதிகளின் கீழ் செல்கிறது என்று கருதப்படுகிறது. ஒட்டுமொத்தமாக அந்த நதி சுமார் 6 ஆயிரம் கி.மீ தூரத்திற்கு ஓடுகிறதாம். இந்திய ஆய்வாளரின் பெய ரின் நினைவாக "ஹம்சா நதி" என்று இந்த நதிக்கு 2011 ஆம் ஆண்டு அதிகாரபூர்வமாக பெயரிடப்பட்டு அவ்வாறே அழைக்கப்படுகிறது. அமேசான் ஆற்றில், இப்படி ஆற்றுக்கு கீழே ஹம்சா நதி ஓடுவது போல கண்களுக்குப் புலப்படாத பூமிக்கு மேலே செல்கிறதாம். அதனைப் பறக்கும் ஆறு என்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத இந்த ஆறு, அமேசான் பகுதிக்கு மேல் பறந்து கொண்டிருக்கிறது என்றும். இது முற்றிலும் நீராவியால் உருவாகியுள்ளது என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சாதாரணமாக காடுகளில் ஒரு சதுரமீற்றர் பரப்பளவில் உள்ள மரங்கள் ஒரு நாளைக்கு 1000 லீற்றர் அளவு தண்ணீரை ஆவியாக வெளியிடுமாம். அதேசமயம் அதே அளவுள்ள கடல் நீரானது ஒரு லீற்றர் அளவு நீராவியாக வெளியிடும். இந்த நீராவியானது பரந்து பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் காற்றின் ஈரப்பதத்தை சற்றே அதிகரிக்கும்.

ஆனால் அமேசான் காடு வெளியிடும் நீராவி ஆண்டெஸ் மலைத்தொடர்களில் பயணித்து அத்தொடர்களில் உள்ள அடர்த்தியான மரங்கள் வெளியிடும் காற்றையும் கிரகித்து பரவலான ஆறு போன்ற நீரோட்டத்தை வானில் உருவாக்குகின்றதாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

317

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆரோக்கிய உணவு அனைவருக்கும் பொதுவானது

நாம் இன்று உண்ணும் உணவு மேலைத்தேசமோகம், நேரமின்மை காரணமாக நாம் இன்று ஆரோக்கியமற்ற உணவு வகைகளை உண்கின்றோம். விரைவாகத் தயாரிக்கப்படக் கூடிய, சுவையான, இலகுவில் சமிபாடடையக் கூடிய நூடில்ஸ் போன்ற உணவுகளை நாடுகிறோம். இதனால் உடலுக்குத் தேவையான புரதங்கள், கனிப் பொருட்கள், விற்றமின்கள் கிடைக்காமல் போவதுடன் மேலதிக கலோரிகளால் உடற்பருமன் அதிகரிப்பதுடன் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நாம் இன்று விரும்பி உண்ணும் உணவுகளில் அதிகசீனி, உப்பு, நிரம்பிய கொழுப்புக்கள், அதிக மாப்பொருள் என்பன அளவுக்கு அதிகமாக உள்ளன. இவை சுவையாக இருக்கின்ற போதிலும் உடலிற்குத் தீங்கானவை. ஆரோக்கிய உணவு (healthy diet) புரதம், நிரம்பாத கொழுப்புக்கள், சிக்கலான காபோவைதரேற்றுக்கள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நிறைந்த பூரண உணவு வகைகளே ஆரோக்கிய உணவாகும். ஆரோக்கிய உணவு என்பது வயது, பால் வேறுபாடு இன்றி அனைவருக்கும் பொதுவானது. நாம் சிறுவயது முதல் ஆரோக்கிய உணவு உண்ணப் பழக வேண்டும்.

உடலிற்கு ஆரோக்கியம் அளிக்கும் பழவகைகளை நமது உணவில் அதிகளவு சேர்த்துக் கொள்ள வேண்டும். பழங்கள் எமக்கு விற்றமின் சி, விற்றமின் ஏ போன்ற அத்தியாவசியமான விற்றமின்களை வழங்குகின்றன. பழங்களில் அதிகமுள்ள பொட்டாசியம் குருதி அமுக்கத்தை குறைக்கின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் மாம்பழம், பலாப்பழம் போன்ற அதிக இனிப்புள்ள பழங்களை, தவிர்ப்பது நல்லது. அவர்கள் வாழைப்பழம், பப்பாப்பழம், பச்சை அப்பிள், கொய்யா, நாவல், ஜம்பு போன்ற பழங்களை உண்ணலாம். பழங்களில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை தடுப்பதுடன் மூலநோய், பெருங்குடற் புற்றுநோய் போன்றவை ஏற்படாமல் பாதுகாக்கின்றது. மரக்கறிவகைகளும் கீரைவகைகளும் பழங்களைப் போலவே கனியுப்புக்களையும் விற்றமின்களையும் நார்ச்சத்தையும் தருகின்றன.

இவற்றில் உள்ள காபோவைதரேற்றுக்கள் சிக்கலான நிலையில் இருப்பதால் இலகுவில் உறிஞ்சப்படுவதில்லை. எனவே இரத்தத்தில் குளுக்கோசின் அளவு விரைவாக அதிகரிப்பதில்லை. இது நீரிழிவு நோயாளிகளுக்கு அதிக நன்மை தரும். கீரை வகைகளில் அதிக இரும்புச்சத்து உள்ளது. அது குருதிச்சோகை ஏற்படுவதை தடுக்கிறது. சைவ உணவு மட்டும் உண்பவர்கள் தமது உணவில் நாளாந்தம் பொன்னாங்கண்ணி, வல்லாரை போன்ற கீரை வகைகளை சேர்த்துக் கொள்ள வேண்டும்.


புரதச்சத்து அதிகமுள்ள பருப்பு, கடலை,அவரை வகைகள், பயறு, கௌபி, சோயா, போன்றவை எமக்கு புரதச்சத்தையும் இரும்புச்சத்தையும் அளிக்கின்றன. இவற்றில் காபோவைதரேற்றுக்கள் குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு இவை சிறந்தவை. சோயா அவரையில் சிறந்த தர புரதம் உள்ளது. சிறுவர்களின் வளர்ச்சிக்கு புரத உணவுகள் அவசியமாகும்.

தானிய வகைகளை பொறுத்த வரையில் தீட்டாத முழுத்தானியங்களே சிறந்தவை. தீட்டாத அரிசியில் நார்ச்சத்தும் விற்றமின் ட உம் அதிகமுள்ளன. ஆசியக் கண்டத்தை சேர்ந்த நாங்கள், அதிக மாச்சத்துள்ள சோறு மற்றும் அரிசிமா, கோதுமை மாப்பண்டங்களை அதிகளவில் உண்கிறோம். உடலை வருத்தி வேலை செய்யாதவர்களுக்கு இது தீங்கானது.

எனவே நாம் மரக்கறி வகைகளை அதிகமாகவும் மாப்பொருட்களை குறைவாகவும் உண்ண வேண்டும். நாட்டரிசி, குத்தரிசி என்பன சம்பா அரிசி, பொன்னி அரிசி போன்ற வெள்ளை அரிசிகளை விடச் சிறந்தவை. மாவகைகளில் ஆட்டாமா, குரக்கன், உழுந்து என்பன சிறந்தவை. கோதுமை மாவில் அதிகளவு மாப்பொருள் இருப்பதால் தவிர்ப்பது நல்லது. பொதுவாக எல்லோரும் எண்ணெய் வகைகளை குறைவாக எடுப்பது நல்லதாகும்.

நிரம்பிய கொழுப்பமிலங்கள் உள்ள தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் என்பன குருதியில் கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்கச் செய்வதனால் தீங்கானவை. நிரம்பாத கொழுப்பு அமிலங்களால் ஆன சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய், நல்லெண்ணெய், சோயா எண்ணெய், சோள எண்ணெய் போன்றவை சிறந்தவை ஆகும். மாஜரின் மற்றும் பிஸ்கட் வகைகளில் Transfattyacid எனப்படும் தீங்கான கொழுப்பமிலங்கள் உள்ளன என்பதால் அவை தவிர்க்கப்பட வேண்டியவை. நிறை உணவான பால் ஒரு நிறை உணவு. அதில் கல்சியம், உயர்தரப் புரதம், விற்றமின்கள் நிறைந்துள்ளன. வளரும் பிள்ளைகளுக்கு பால் அத்தியாவசியம். பாலில் உள்ள பிரச்சினை அதில் உள்ள கொலஸ்ரோலும் நிரம்பிய கொழுப்புமாகும்.

எனவே வளர்ந்தவர்களும் கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்களும் பசுப்பாலையும் முழு ஆடை பால் மாக்களையும் தவிர்த்து கொழுப்பு நீக்கப்பட்ட பால் மாவை பயன்படுத்தலாம். மாமிசம் உண்ணாதவர்களுக்கு விற்றமின் B 12



பாலின் மூலம் மட்டுமே கிடைப்பதால் அவர்கள் பால் அருந்த வேண்டும்.

மீனும் இறைச்சிவகைகளும் எமக்கு தேவையான புரதம், கல்சியம், விற்றமின்கள்,அயடீன் என்பவற்றை அளிக்கின்றன. மீனில் உள்ள கொழுப்பில் ஓமேகா-3 எனும் கொழுப்பமிலம் உள்ளது. இது இருதய நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்கிறது. பெரிய மீன்கள் தீங்கானவை என்ற கருத்து நம்மிடையே உள்ளது. இது தவறானது. இறைச்சி வகைகளில் கோழி இறைச்சி ஆரோக்கியமானதாகும். ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி என்பவற்றில் நிரம்பிய கொழுப்பமிலங்கள், கொலஸ்ரோல் என்பன அதிகம் உள்ளதால் தவிர்ப்பது நல்லது. Redmeat உள்ள மாடு, ஆடு என்பவற்றின் இறைச்சி புற்றுநோயை ஏற்படுத்தலாம்.

முழு உணவான முட்டையிலும் உயர்தரபுரதம், விற்றமின்கள், கனிப்பொருட்கள் நிரம்ப உள்ளன. ஆனால் முட்டையில் கொலஸ்ரோல் அதிகம் உண்டு. குருதியில் கொலஸ்ரோல் உள்ளவர்கள் முட்டை மஞ்சள் கருவை ஒரு வாரத்துக்கு 3 தடவைக்கு மேல் உண்ணக்கூடாது. முட்டை வெள்ளைக் கருவை அதிகமாக உண்ணலாம். உப்பை குறைப்பது நல்லது. உணவில் உப்பை இயன்றவரை குறையுங்கள். உயர்குருதிஅமுக்கம் உள்ளவர்கள் அதிக உப்புள்ள சூப் வகைகள், கருவாடு என்பவற்றை குறைவாக உண்ண வேண்டும். சராசரியாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டி உப்பு போதுமானதாகும்.

இனிப்பை தவிருங்கள். எந்த வயதினராக இருந்தாலும் எல்லோருமே இனிப்பு வகைகளை குறைக்க வேண்டும். இனிப்புள்ள மென்பானங்கள், ஐஸ்கிறீம், இனிப்பு பிஸ்கட்டுகள், கேக் என்பவற்றை தவிர்க்க வேண்டும். தாகமாக இருக்கும் போது மென்பானங்களை தவிர்த்து நீரை அருந்துங்கள். நீர் அத்தியாவசியம். ஒவ்வொரு நாளும் போதுமான அளவு நீரை அருந்துங்கள். வளர்ந்த ஒருவர் ஒரு நாளைக்கு 2- 2 1/2 லீற்றர் கொதித்தாறிய நீரை பருக வேண்டும். இதன் மூலம் சிறுநீரகக்கற்கள், சிறுநீர் கிருமித்தொற்று என்பவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஆரோக்கிய உணவு உண்பதன் மூலம் ஆரோக்கியமான வாழ்வை பெறுவதுடன் நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். நோய் வாய்ப்பட்ட பின்னர் உணவுக் கட்டுப்பட்டை கடைப்பிடிப்பதை விட வருமுன் காப்பதே சிறந்தது.

Dr.எஸ்.கேதீஸ்வரன்
பொதுவைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜனாதிபதி அலுவலகத்தின் வடக்கு மாகாண அபிவிருத்தி விசேட பிரிவு உப அலுவலகம் வவுனியாவில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதன் போது, வவுனியா ஓமந்தை அரச வீட்டுத்திட்ட பயனாளிகள் 32 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், போரால் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு இழப்பீடுகளும் 10 விவசாயிகளுக்கு மானிய உரமும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்:-வசந்தரூபன்)

# போலி வாகன இலக்கத்தகடுகளை தயாரித்த ஒருவர் கைது

(கம்பஹா)

கம்பஹா மாவட்டம் - சீதுவ பிரதேசத்தில் அச்சகம் ஒன்றை நடத்தும் போர்வையில், போலி வாகன இலக்கத்தகடுகளை தயாரித்த ஒருவர் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட 11 வது குற்றப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

எண்மாண அச்சகப் பணிகளை மேற்கொண்டு வந்த குறித்த நிறுவனத்தில், மோட்டார் வாகனப்பதிவு திணைக்களம் வழங்கிய வாகன இலக்கத்தகடுகளுக்கு இணையான போலி இலக்கத்தகடுகள் இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சட்ட ஆவணங்கள் மற்றும் உரிமங்களுக்கு ஏற்ப குறித்த இலக்கத்தகடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பணத்திற்காக விற்பனை செய்யும் நோக்கிலேயே இவை தயாரிக்கப்பட்டதாக சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 57 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரிடம் இருந்து 19 போலி இலக்கத்தகடுகள், கணனி மற்றும் போலி இலக்கத்தகடுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் வெற்றுத் தகடுகள், அரச இலச்சினைகள் கொண்ட அழுக்கவலகு என்பனவும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி)

# உரத்திற்கு பதிலாக பணம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

உரத்திற்கு பதிலாக, அதனைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான செயற்றிட்டத்தை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர்கள் , உரம் தொடர்பில் செயற்படும் மேலதிக பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்புபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த பெரமுனவுக்கு பணிப்புரை

(கொழும்பு)

சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்புபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவிக்கையில்,

சமூக வலைத்தளங்கள் ஊடாக அவதூறு பரப்புரைகளை பரப்பும் பலர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விபரங்களை கட்சி சட்ட குழுவிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் சமூக வலைத்தளங்களில் பல்வேறு பெயர்களில் தோன்றி பொதுஜன பெரமுன



மீதும் அக்கட்சியின் தலைவர்கள் மீதும் சேறு பூச இந்த குழுக்கள் முனைவதாகவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (நி)

# புதிதாக ஆறு உறுப்பினர்கள் நியமனம்-சபாநாயகர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் மூன்று குழுக்களுக்கு புதிதாக ஆறு உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்படி, கோப் குழு தயாசிறி ஜயசேகர மற்றும் மேஜர் சுதர்சன் தெனிபிட்டியவும் கோபா குழுவிற்கு பிரசன்ன ரணவீர மற்றும் எஸ். வேலுகுமாரும் நியமிக்கப்படவுள்ளனர்.

மேலும் அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்றக் குழு உறுப்பினர்களான கலாநிதி நாலக கொடஹேவா மற்றும் சுமித் உடுகும்புரவும் நியமிக்கப்படவுள்ளனர். (நி)

# கார்த்திகை மாத இராசி பலன்கள் 17.11.2022-15.12.2022

## சிம்மம்

**நினைத்த காரியத்தை உடனுக்குடன் செய்ய நினைக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். தொழில் வெற்றி நடை போடும். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தனி முயற்சி பலன் தரும். தடைகள் தானாக விலகும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பு இனிய விதம் அமையும். வாழ்க்கைத் துணைக்கு வேலை வாய்ப்புக் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். "இதுவரை பணி நிரந்தரமாகவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு அதற்கான வாய்ப்பு வந்து சேரும். கடந்த காலத்தில் நடைபெறாத சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள். குரு, அஷ்டமஸ்தானத்தில் வக்கிர நிவர்த்தியாகிப் பலம்பெறுகிறார். 8 இற்கு அதிபதி பலம்பெறுவது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவதால் அதன் விளைவாக நற்பலன்கள் உங்களுக்குக்கிடைக்கும். அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். தட்டுப்பாடுகள் தானாக விலகும்.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு தன - இலாபாதிபதியான புதன், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்வது ஒரு யோகமான நேரமாகும். தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். வெற்றிப் படிக்கட்டின் விளிம்பில் ஏற வாய்ப்புகள் வாசல் தேடி வரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். வெளிநாட்டில் உள்ள நண்பர்களின் மூலம் ஆதாய வரவு உண்டு. இழந்ததை மீட்கும் பணியில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி செவ்வாய், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். சொத்து விற்பனையால் ஆதாயம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர் களின் ஆதரவு உண்டு. தலைமையின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

21 ஆம் திகதி சுக்கிரன், பஞ்சம ஸ்தானம் வரும் பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் மற்றும் கல்யாண முயற்சிகள் கைகூடும் நேரம் இது.

ஆடை, ஆபரணப் பொருட்களின் சேர்க்கை உண்டு. அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமல்லாமல் ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கட்டடத் திறப்புவிழா, கடைத் திறப்பு விழாக்களில் கவனம் செலுத்துவீர்கள். இம் மாதம் சஷ்டி விரதம் இருந்து சண்முகநாதரை வழிபட்டால் சந்தோசம் கிடைக்கும்.

## கன்னி

**சிறப்பான வாழ்வு அமைய சிந்தித்துச் செயற்படும் கன்னி இராசி வாசகர்களே!**

"புத சுக்கிர யோகம்", "புத ஆதித்ய யோகம்" ஆகியவற்றோடு மாதப் பிறப்பு அமைவதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மன நிம்மதி கிடைக்கும். தொழில் மேன்மையும் பொருளாதாரத்தில் நிறைவும் உண்டு.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். அவர்களின் எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் ஒவ்வொன்றாக வெற்றிபெறும். திருமணம் போன்றவற்றில் இருந்த தடைகள் நீங்கும். தன்னிச்சையாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கலாம். உங்கள் இராசிக்கு 4, 7 இற்கு அதிபதியான குரு, வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்று விட்டார். அவரது நேரடிப் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் நிகழ் காலத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். இடம் வாங்குவது, வீடு வாங்குவது போன்றவற்றில் ஈடுபட்டு சுப விரயங்களைச் செய்ய முன்வருவீர்கள். பொதுவாக ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகதி புதன், 4 ஆம் இடத்திற்கு வரும்பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்க மாற்றினத்தவர்கள் ஆதரவு தருவர். உத்தியோகத்தில், சக பணியாளர்களின் மூலமாக சில தொல்லைகளைச் சந்திப்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு கூடுதல் பொறுப்பைக் கொடுத்து வேலைப் பளுவை அதிகரிக்கச் செய்வர்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி செவ்வாய், பாக்கிய ஸ்தானத்திற்கு வரும் போது உடன்பிறப்புகளின் ஆதரவு கிடைக்கும். உயர்மட்ட அதிகாரிகளின் அனுகூலம் உண்டு. முடங்கிக் கிடந்த சொத்து விற்பனை இப்பொழுது துரிதமாக இயங்கி இலாபத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை, மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி சுக்கிரன், சுக ஸ்தானத்திற்கு வரும்போது பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெற்றோர் வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்கள் செயற்பாட்டைக் கண்டு பாராட்டுவர். பதவி உயர்வும், ஊதிய உயர்வும் வரலாம். இம்மாதம் புதன்கிழமை தோறும் அனுமனை வழிபடுவதன் மூலம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு தலையிடும் என நம்பியே தொடர் போராட்டங்களில் ஈடுபடுகிறோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

**(நெளுக்குளம்)**

**வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது போராட்டம் 2100 ஆவது நாளை எட்டிய நிலையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**






வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக 2100 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மார் நேற்று 12 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமக்குத்தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் வெளிநாடுகளின் தலையீடு அவசியம். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எமக்கு உதவி செய்து நேரடியாக வந்து இப்பிரச்சினையைத்தீர்த்து வைக்க வேண்டும்.

நாங்கள் வெளிநாட்டின் தலையீட்டினையே நம்பி இங்கிருந்து போராடி வருகின்றோம் என போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க கொடி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் ஏந்தியிருந்தனர். (நி-299)

# மாவீரர்களின் உறவுகளுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு





(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னை நீராவி கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று சனிக்கிழமை மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேளமாலிகிதன் கலந்து கொண்டதுடன் மாவீரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-316)

வவுனியா நம்பைவெட்டி மீள் குடியேற்றக் கிராமத்தில் சிறுவர் கல்வி மேம்பாட்டு அமைப்பின் அனுசரணையில் முன்பள்ளிக் கட்டடம் ஒன்று கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (படம்- சதீஸ்)



# முரசுமோட்டைப் பகுதியில் ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட முரசுமோட்டை பகுதியில் இயற்கை சூழலைப் பாதுகாகாக்கும் வகையில் ஆயிரம் மரக்கன்றுகள் நேற்று நடுகை செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை கமநல சேவை நிலைய நிர்வாக எல்லைக்கு உட்பட்ட முரசுமோட்டை பிரதான நீர்ப்பாசன வீதியோரங்களில் புலிங்கதேவன் முறிப்பு மற்றும் முரசுமோட்டை கமக்கார அமைப்புக்களின் ஏற்பாட்டில் கிறீன் லேயர் நிறுவனம், முரசுமோட்டை மக்கள் ஒன்றியம் (பிரான்ஸ்) ஆகியவற்றினால் இயற்கை சூழலை பாதுகாக்கும் விதத்தில் ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் ஆரம்ப நிகழ்வு நேற்று பகல் 9.30 மணிக்கு கிராம உத்தியோகத்தர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. (நி-315)

# 16 இலட்சம் பெறுமதியான நகைகளை திருடியவர் கைது

## நகைகளுடன் ஹெரோயினும் மீட்பு

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உயரப்புலம் மற்றும் இளவாலை பகுதியில் உள்ள வீடுகளை உடைத்து 16 இலட்சம் ரூபாய் தங்க நகைகளை திருடிய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் திருடிய நகைகள் சிலவற்றினை நகை கடையில் அடகு வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அவரிடமிருந்து 130 மில்லிக்கிராம் ஹெரோயின், நகைகள், நகை அடகு வைத்த ஆவணம் மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் இளவாலை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.



குறித்த சந்தேகநபரை நீதி மன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன்னலம் சார்ந்த சிந்தனையால் சிவனைப் பித்தா என்றேசிய சுந்தரர்

தடுத்தாட்கொண்ட புராணத்தை சமயம் கடந்து அனைவரும் கற்க வேண்டும் என்பது எம் தனிப்பட்ட விருப்பம்.

இதற்குள் சமயச் சார்போ சமய வாதமோ யாதும் கிடையாது.

மாறாக தன் பக்தனுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக இறைவன் மானிட வேடம் தாங்கி வந்தான்.

அவ்வாறு இறைவன் மானிட வேடம் தாங்கி வந்தபோதே பித்தா என்று ஏச்சுப் பெற்றான் என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

அதாவது இந்த மண்ணில் மனித வடிவம் எடுத்துவிட்டால், அவன் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உரித்தானவனாகின்றான்.

இஃது ஏனெனில் கடவுள் மனிதனாக வந்தால்கூட, மனிதனால் கடவுளை இனங்கண்டுகொள்ள முடிவதில்லை.

இதற்குக் காரணம் என்ன என்பதை தடுத்தாட்கொண்ட புராணம் தெளிவுபடுத்துகின்றது.

அதாவது திருமண பந்தத்தில் ஆசைப்பட்ட சுந்தரரால், வந்த வேதியரைக் கனம் பண்ண முடியவில்லை.

வேதியர் யாராக இருப்பார் என்றோ வேதியரின் முகத்தில் இருக்கக்கூடிய கருணைப் பொலிவையோ அவரால் கிஞ்சித்தும் உணர முடியவில்லை.

சுந்தரரின் எண்ணமெல்லாம் தன் சுய நலம் சார்ந்தது. எப்படியும் தனது திருமணம் நடந்தாக வேண்டும் என்ற ஒரே சிந்தனையில் இருந்த சுந்தரருக்கு கடவுளையும் மனிதனையும் பிரித்தறிய முடியாமல் போனது.

மாறாக திருமணம் தடைப்பட்டு விடுமோ என்ற ஏக்கம் அவரைப் பேதலிக்கச் செய்தது. பேதலித்த சுந்தரர் கிழவேதியரைப் பார்த்து பித்தா என்று திட்டினார்.

இங்குதான் திட்டியவன் பித்தனா? திட்டு வாங்கியவன் பித்தனா? என்ற கேள்வி எழுகிறது.

ஆக, பொதுநிலை இழந்து தன்னிலைப் பட்டு சிந்திக்கக்கூடிய எவரும் எந்த வித்தியாசத்தையும் உணர முடியாதவராக இருப்பதுடன் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள இயலாமல் மாயைக்குள் கிடந்து அழுந்துவர்.

இதை நாம் கூறும்போது, அது சரி இப்போது தடுத்தாட்கொண்ட புராணம் எதற்கு? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், எல்லாம் எங்கள் தமிழ் அரசியல் சார்ந்ததே என்று பதில் அளிக்கப்படும்.

ஆம், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். எங்கள் தமிழ் மக்கள் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டும் என்ற சிந்தனை நம் தமிழ் அரசியல்வாதிகளிடம் இம்மியும் கிடையாது.

அவர்களைப் பொறுத்தவரை எதைக் கதைத்தால் – எப்படி நடந்தால் – என்ன செய்தால் அடுத்த தேர்தலிலும் நாம் வெல்ல முடியும் என்பதேயன்றி, தமிழ் மக்களின் நலன் அல்ல என்பது புரிதற்குரியது.

இவ்வாறான மனநிலையில் உள்ளவர்களால் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாதென்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

# பாடசாலைகளை விட்டு இடைவிலகும் மாணவர்கள்

## தடுக்க புதிய திட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார நெருக்கடியை தடுக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சிந்தனைக்குழு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதன்படி, பாடசாலை மாணவர்களை தவிர்த்து, வயது வந்தவர்களின் பணமீட்டும் திறனை விரிவுபடுத்தும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

பொருளாதார சிந்தனைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தாழ்த்தப்பட்ட பகுதிகளில் உள்ள பெரியவர்களின் வருமான ஆதாரங்களை அதிகரிக்க சிறப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் துறை மாணவர்களின் அவல நிலையை மையமாகக் கொண்ட ஆய்வுகள், தோட்டப் பகுதிகளில் பாடசாலைகளை விட்டு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

பெருந்தோட்டத் துறையில் ஏறத்தாழ 4 வீதமான ஆரம்பநிலை மாணவர்கள், 20 வீதமான இடைநிலை மாணவர்கள் மற்றும் 26 வீதமான கல்லூரி மாணவர்கள், தமது கல்வியை இடைநடுவில் நிறுத்தியுள்ளனர்.

இதற்கு நேர்மாறாக, நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இந்த விகிதங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இது சமூகங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கின்றன.

இந்தநிலையில் பெருந்தோட்டச் சமூகங்களில் மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச உணவு திட்டத்தை தொடர வசதி செய்வது, சிறுவர் தொழிலாளர்களைக் குறைப்பதற்கான மற்றொரு சாத்தியமான தீர்வாக இருக்கும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்குள் சிறுவர் தொழிலாளர் இல்லாத இலக்கை அடைய இலங்கை உறுதிபூண்டுள்ளது.

எவ்வாறாயினும், கொரோனா தொற்று நோய் மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி என்பன 2025 ஆம் ஆண்டளவில் சிறுவர் தொழிலாளர்களை ஒழிக்கும் வகையிலான இலக்கு சவாலானதாக மாறியுள்ளதாக பொருளாதார சிந்தனைக் குழு தெரிவித்துள்ளது. (4-7)

## வரவு செலவு திட்டம் திருப்திகரமாக உள்ளது

### – ராஜித –

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் உள்ள பல முன்மொழிவுகள் திருப்திகரமாக அமைந்துள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு கணனி வழங்கும் வேலைத்திட்டத்தை தாம் அரசாங்கத்தில் இருந்தபோது நிறைவேற்ற முடியாத நிலை காணப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க அதனை மீண்டும் நடைமுறைப் படுத்த முயற்சிப்பது நல்லது எனவும் அவர் குறிப்பிட்டார். (4-7)

## போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினால் போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகம் ஒன்று கூத்தாட்டு அவைக் கழகத்துடன் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடச் சந்தை மற்றும் சுன்னாகம் பஸ் நிலையத்தில் நடாத்தப்படவுள்ளது. (4-7)

## மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சிப் போக்கில் பதிவாகியுள்ளது.

இதன்படி, ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 2.16 டொலர் வீழ்ச்சியடைந்து, 87.62 டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை, 1.56 டொலர் வீழ்ச்சியடைந்து, 80.08 டொலராக பதிவாகியுள்ளது. (4-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை."

சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொழும்பு-கிராண்ட்பாஸில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் "மன்ன கண்ணா" என்றழைக்கப்படும் மாரிமுத்து கணேசன் என்ற பாதாள குழு உறுப்பினர் படுகாயமடைந்துள்ளார்.

உந்துருளியில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், மன்ன கண்ணாவுக்கு தலை மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து, ஆபத்தான நிலையில் அவர் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை கிராண்ட்பாஸ் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (4-7)

## பாடசாலை உபகரணங்களின் விலையில் மாற்றமில்லை

பாடசாலை உபகரணங்களின் விலைகளில் எவ்வித அதிகரிப்பும் செய்யப்படவில்லை என நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டார்.

செஸ் வரி அதிகரிப்பினால், பாடசாலை மாணவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், "செஸ் வரி திருத்தம், பாடசாலை உபகரணங்களின் விலைகளில் தாக்கம் செலுத்தவில்லை.

இறக்குமதி செய்யப்படும் அச்சு மற்றும் அப்பியாச புத்தகங்கள், பென்சில், அழிறப்பர், உள்ளிட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான காகிதம் உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கு கடந்த 15 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட செஸ் வரி திருத்தத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.


எனவே, செஸ் வரி திருத்தத்தினால் இறக்குமதி மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களினால் பாடசாலை உபகரணங்களின் விலைகளில் எவ்வித அதிகரிப்பும் செய்யப்படமுடியாது என்றார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலெழும்பத் தயாரான விமானம் தீயணைப்பு வாகனத்துடன் மோதி விபத்து

## தீயணைப்பு வீரர் இருவர் உயிரிழப்பு





(லிமா).

தென்னமெரிக்க நாடான பெருவின் தலைநகர் லிமாவில் உள்ள விமான நிலைய ஓடு பாதையில் ஏர்பஸ் விமானம் ஒன்று விபத்திற்குள்ளாகியுள்ளது.

ஏர்பஸ் ஏ320 என் விமானமே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

பறப்பதற்கு தயாரான நிலையிலேயே இந்த விமானம் ஓடு பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தீயணைப்பு வாகனத்தின் மீது மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருகையில்,

பெரு நாட்டின் ஏர்பஸ் ஏ320 என்ற விமானத்தில் 102 பயணிகள் இருந்துள்ளனர். இந்நிலையில், விமானம் ஓடு பாதையில் இருந்து மேலே எழும்புவதற்காக வேகமாக சென்றுள்ளது.

அப்போது திடீரென்று அங்கிருந்த தீயணைப்பு வாகனம் மீது எதிர்பாராத விதமாக மோதியது. வாகனம் மீது மோதிய வேகத்தில் விமானத்தின் பின்புறம் தீப்பிடித்தது.

இதனால் விமானத்தை விமானிகள் நிறுத்த முயற்சித்தனர். ஓடு பாதையில் விமானம் தீப்பொறிகள் பறந்தபடியும் கரும்புகை வெளியேறியவாறும் பல அடி தூரம் சென்று நின்றது. இதன் போது விமானத்தில் இருந்த பயணிகள் பீதியில் அலறினார்கள்.

உடனே தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து விமானத்தில் பற்றிய தீயை அணைத்தனர். அதனையடுத்து விமானத்துக்குள் இருந்த பயணிகள் மற்றும் ஊழியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். இந்த விபத்தில் தீயணைப்புப் படையைச் சேர்ந்த 2 பேர் உயிரிழந்துள்ளனர். (நி)

# அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு வடகொரியா பதிலடி கொடுக்கும்

## கிம் அதிரடி



(பியாங்யாங்)

அணு ஆயுதங்களைப் பயன்படுத்தி தொடரும் அச்சுறுத்தல்களுக்கு வடகொரியா பதிலடி கொடுக்கும் என அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரிய அரச ஊடகத்தை மேற்கோள்காட்டி, வெளிநாட்டு ஊடகங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

வடகொரியா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை சோதனை ஒன்றை நடத்திய பின்னணியில் அவரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இதேநேரம், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தமது இளைய மகளுடன் முதல் முறையாக பொதுவெளியில் தோன்றியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மிகப்பெரிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை ஏவுதலின் போது வடகொரிய ஜனாதிபதியுடன் அவரின் இளைய மகள் கிம் சூ ஏ இணைந்திருந்த புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனூடாக தமது இருப்புப் பற்றிய வதந்திகளுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (நி)

# நீண்ட பாதங்கள்; கின்னஸில் இடம்பிடித்த பெண்

(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் உலகில் மிக நீண்ட பாதங்களை கொண்டதற்காக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் பகுதியைச் சேர்ந்த டான்யா ஹெர்பர்ட் என்பவரே கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தவராவார்.

சுமார் 6 புள்ளி 9 அடி உயரம் கொண்ட அந்த பெண் உலகிலேயே உயரமான பெண்ணை விட மூன்று இன்ச் உயரம் குறைவானவர். இந்நிலையில், இவரது வலது பாதம் 13 புள்ளி 3 இன்ச் உயரமும் இடது பாதம் 12 புள்ளி 79 இன்ச் உயரமும் கொண்டுள்ளது.

தனது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவருமே அதிக உயரம் கொண்டவர்கள் என்பதால் மரபு ரீதியாக தாமும் உயரமாக பிறந்துவிட்டதாக அந்தப் பெண் தெரிவித்தார். (நி)

# பள்ளத்தில் பாய்ந்த வான் 20 பேர் ஸ்தலத்தில் பலி

## பாகிஸ்தானில் சோகம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நிகழ்ந்த வீதி விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 20 பேர் உயிரிழந்தனர்.

செஹ்வான் ஷெரீப்பில் உள்ள புனித சூஃபி ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று கைர்பூர் அருகே சிந்து நெடுஞ்சாலையை ஒட்டிய 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அண்மையில் அந்த பகுதியில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் அந்த பள்ளம் முழுவதும் வெள்ள நீர் தேங்கியிருந்தது.

இந்த விபத்தில் 8 பெண்கள், 6 சிறுவர்கள் உட்பட 20 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அவர்களது உடல்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது.

சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவர்கள் ஒரே குடும்பத்தவர்களாக இருக்கலாம் என அந்த நிறுவனத் தலைவர் மருத்துவர் மொயின் சித்திக் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா:71 ¾ சூரி 11 செவ் 1 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/13116

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: சூரி 1 செவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L(தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13117

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: சூரி 4 செவ் 9 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:Engineer (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு:ஆங்கிலம் பேசத் தெரிந்த பெண். கொழும்பு விரும்பத்தக்கது
தொ.இ: B/13118

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: சூரி 1 செவ் 5 இல்
தகைமை/தொழில்:O/L (லண்டன்)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: B/13119

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா: சூரி 11 செவ் 2 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:BSc வங்கி உதவியாளர்
எதிர்பார்ப்பு:கணக்காளர்.வங்கியாளர். பொறியியலாளர்.அரச பணி
தொ.இ:G/13145

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 4
கி.பா:சூரி 1 செவ் 12 இல்
உயரம்:5'5"
தகைமை தொழில்:BBA பட்டதாரி பட்டயக் கணக்காளர் (தனியார்)
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/13147

பிறப்பு:1993இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 4
கி.பா: சூரி 3 செவ் 4 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: A/L Electro cartographer
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ:G/13150

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா: 33 சூரி 8 செவ் 9 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13154

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட இடிபாடு...

டிருந்த மரங்கள் விழுந்தமையால் பணியாளர் கட்டட இடிபாட்டுக்குள் சிக்கி காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் இறந்தவர் தவபாலன் சதீசன் (வயது - 27) யாழ்ப்பாணம் சுழிபுரத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வருகின்றது.

மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,315,316)

## நாவற்குழியில்...

விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 31வயதான சுஜேன் என்ற இளைஞனே கையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வாள்வெட்டுச்சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## கிணற்றிலிருந்து...

கோட்டைப் பகுதியைச் சேர்ந்த நவரத்தினம் சுரேஷ் (வயது-32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மதுபோதையில் இருந்த அவர் கிணற்றில் விழுந்தவேளை அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-7,104)

## வவுனியா...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கான விஜயமாக வவுனியாவில் அமைந்துள்ள வன்னிக் கூட்டுப் படைத் தலைமையகத்துக்கு விசேட உலங்கு வானூர்தி மூலம் வருகை தந்தார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு வருகை தந்த ஜனாதிபதியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் ஆகியோர் நேரில் சென்று வரவேற்று அழைத்து வந்தனர்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் விசேட கூட்டம் இடம்பெற்றது. இதற்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (4-7)

## வவுனியாவில்...

வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டிருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் இணைப்பு செயலக திறப்பு விழாவிலும் எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (4-7)

## அனைவரும்...

தென்னிலங்கை மக்கள் பல்வேறு காரணங்களால் சிரமப்படுவதாகவும், அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க தாம் துரிதமாக செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த அலுவலகத்தில் இருந்தபடி வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடியும். ஜனாதிபதி அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.

அமைச்சுக்களிலுள்ள அதிகாரிகளும் இந்த அலுவலகத்திற்கு நேரில் வந்து வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு முற்படுவார்கள் என தான் நம்புகின்றேன் என மேலும் தெரிவித்தார். (4-7)

## மன்னிப்புச் சபை...

கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள இருநபர்கள் குறித்து கரிசனை வெளியிட்டு நாங்கள் இந்த கடிதத்தை எழுதுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முக்கிய மாணவத் தலைவர்கள் துன்புறுத்தப்படுவது குறித்து நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம், இது இலங்கையில் மனித உரிமைகள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொது ஆர்ப்பாட்டம் மீது பொலிஸாரின் நடவடிக்கை குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (4-7)

## காணிப் பிரச்...

காட்டினர்.

வவுனியா மாவட்டச்செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றதுடன், அந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

மாகாணத்தில் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினை மற்றும் அவற்றுக்கு வழங்கப்படக் கூடிய தீர்வுகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வடமாகாணத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக வடமாகாணத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கில் இதுவரையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நகர அபிவிருத்தி வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், றிசாத் பதியூதீன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1399
வெற்றி இலக்கங்கள்
கடகம் 5 1 1 1 5 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.11.19
சீட்டிழுப்பு இலக்கம் - 974
K 16 53 65 78
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.11.19 | சீட்டிழுப்பு இலக்கம் 3186
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
C 37 46 71 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1292
C 17 19 60 62 77

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.19
சீட்டிழுப்பு இலக்கம் 253
மிதுனம் 08 12 28 52 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/11/19
சீட்டிழுப்பு இலக்கம் 4944
H 3 7 6 6 9 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1919 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.19 | தினம் சனிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,001,420/-
K 11 23 32 46
4683 | 642

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.19
சீட்டிழுப்பு இல : 4080
வர்ணம் : பச்சை
ரூ. 3,643,840/-
வெற்றி இலக்கங்கள் 13 27 55 65 S

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,539,914.80
திகதி 2022-11-19
வெற்றி வாரம் 3631
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 23 25 42 59 விருச்சிகம்
ரூ. 8,863,140/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 16 25 39 53 57
1095 | சிவப்பு | 2022.11.19 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 278,684,501.80

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 546 | திகதி 2022-11-19 | வர்ணம் சிவப்பு
B 05 08 21 01
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 14,364,380/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1745
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.19
ரூ. 3,828,460/-
வெற்றி இலக்கங்கள் 08 10 24 41 G

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகில், A9 வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கீழ்த் தளத்தில் இரு கடைகளும் மேல்த் தளத்தில் இரு கடைகளுமாக அமையப் பெற்ற கடைத் தொகுதி பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வாடகைக்கு விடப்படும்.

(13481)

**077 247 0590, 076 535 7084**

## காணி விற்பனைக்கு

தாவடியில் 1 பரப்பு 2 குழியுடைய வெற்றுக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

(13501)

**070 791 7578**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(13314)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970




தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் குறித்த வைத்தியசாலைக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகளில் ஒரு பகுதி சிவபூமி அறக்கட்டளையினால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனால் குறித்த மருந்துகள் நேற்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

(படம் - சிவசாந்தன்)


## மணமகள் தேவை

யாழ். இந்து, 1987 உத்திரட்டாதி, திருகோணமலையில் சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு

(13499)

**071 658 7658**

## வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலியில் உள்ள உணவகத்திற்கு வேலையாட்கள்/ சமையல் கலைஞர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13457)

**077 273 1034**

## தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கட்டடத்திற்கு பிளம்பிங், வயரிங் வேலை தெரிந்த கட்டட பராமரிப்பாளர் தேவை. பகுதி நேரமாக வேலை செய்யலாம்.

(13512)

**074 368 0029**

10வருட வெற்றிகரமான சேவையில். JAN/2023

## UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்

இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேர்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

(13483)

WORLD EDUCATION CONSULTANCY

ஆலுவலகம்: புதிய உயர் தல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்

கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி.

0779265447 / 0217200989

## இராஜ மருத்துவம்

கரப்பன், கிரந்தி, சோரியாசிஸ், மதுமேகம், வெள்ளை படுதல், கெர்ப்பவாயு, தீட்டு ஒழுங்கீனம், உடல்மெலிவு, பருமன், செங்கமாரி, பக்கவாதம், ஆண்மைக் குறைவு, சிறிய மார்பகம், மன அழுத்தம் சிகிச்சை பெறுவதற்கு.

**076 274 4488**

பேரறிஞர் Dr. K. பாலசுப்பிரமணியம்

சிறப்பு ஆலோசகர்

வல்லை வீதி, சங்கானை

(C-5296)

## ஆங்கில வகுப்பு

ஆங்கில பாடம் Grade 9,10,11 மாணவர்களிற்கு கற்பிக்கப்படுகிறது.

Spoken English with Grammar for university students and others

**ந.சிவானந்தன்**

H.N.D(Acct), CIMA (P/S)

**Genius Institute**

இல.184, A நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(13504)

076 387 1033, 071 310 6279

## காணி விற்பனைக்கு

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் Medical Faculty இலிருந்து 500 m தூரத்தில் சுற்றுமதிலுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- காணி உரிமையாளர்

(13507)

**074 134 5805**

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 . 12 . 1937



மறைவு 21 . 10 . 2022

அன்னையுடன் மகிழ்ந்த நாளை மனதில்வைத்து பூசிக்கின்றோம்.

கடந்த 21.10.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் வேலுப்பிள்ளை பத்மாவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அதிகாலை 4.00 மணிக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோன நிகழ்வும் பகல் 11.00 மணிக்கும் அன்னாரின் இல்லத்தில் (நெல்லியடி துரையந்தோட்டம்) இன்று (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து உதவியவருக்கும் தொலைபேசி மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள் ஊடாக எங்கள் குடும்ப துயரங்களில் பங்கு கொண்டவர்களுக்கும் இறுதிச்சடங்கில் பங்குகொண்டு பல்வேறுவழிகளில் உதவிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(13503)

துரையந்தோட்டம்
கரவெட்டி வடக்கு, நெல்லியடி.

021 226 4677

இங்ஙனம்
குடும்பத்தினர்

## பதவி வெற்றிடங்கள்

யாழ். STS வைத்தியசாலை பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கிறது.

- வரவேற்பாளர்
- வைத்திய உதவியாளர் (இரவு/ பகல்)
- மருந்தக உதவியாளர்
- காசாளர்
- களஞ்சிய உதவியாளர்
- சிற்றுண்டிச்சாலை நடத்துனர்

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கப்படும்.

யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சுயவிபரக்கோவையினை வைத்தியசாலை வரவேற்பு பகுதியில் கையளிக்கவும்.

(13490)

**077 120 3763**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13508)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.